தனிப்பிரதி விலை {அணா 1 ... வெளிநாட்டு 1½ அணா} KUDI ARASU. Reg. No. M. 2041

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா தபால் செலவு உள்பட | ... | ரூ 3—0 |
| அரை வருஷ சந்தா | ... | ரூ 1-12 |
| வெளிநாட்டுக்கு | ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு | ரூ. 1. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு | ரூ. 2. |
| இதர விசேஷ விளம்பரங்களுக்கு தனி விகிதம் | |

மலர் 4 | ஈரோடு, விபவ ஞு மாசிமீ 13உ (24—2—29) ஞாயிற்றுக்கிழமை. | இதழ் 44

R E V O L T

## "ரிவோல்ட்"

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு வாரம் ஒரு முறை வெளியாகின்ற ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 4
வெளி நாட்டுக்கு ரூ. 5.

ஆசிரியர்கள்:—
ஈ. வெ. ராமசாமி நாயக்கர்
S. ராமநாதன் M. A. B. L.,

விலாசம்:—
மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

R E V O L T

குளிர்! குளிர்!! குளிர்!!!

## பாலக்லவா அல்லது கம்பளி குல்லா.



குளிர், பனி காலங்களில் சரீரத்தைப் பாதுகாப்பதற்காக இந்த கம்பளி குல்லா ஒவ்வொருவரிடத்திலும் ஒன்று இருக்கவேண்டும். அசல் கம்பளி, சிகப்பு, கிரே, பிரௌன், வெள்ளை முதலிய பலகலர்களில் கிடைக்கும்.

நெ. 1 குல்லா பெரியது ரூ. 1—8—0
நெ. 2 குல்லா ரூ. 1—0—0

உடனே எழுதுங்கள்.
கனடியன் மெட்ஸ் பீல்ட், ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## ஜீவரசம்! ஜீவரசம்!!

### சகல நோய்களுக்கும் தேவாமிர்தம் போன்றது

ஒரு பாட்டில் ஜீவரசம் உங்களிடமிருந்தால் வியாதிகளைப்பற்றிய கவலை வேண்டாம். இது ஓர் சிறந்த குடும்ப ஔஷதமென பல பெரியோர்களால் நற்சாக்ஷி பெற்றது. உண்மையறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள், பாட்டில் 1-க்கு விலை ரூ. 1—8—0

முக்கிய வியாபாரிகள்:— லக்ஷிமி ஸ்டோர், ஈப்போ, F. M. S.
T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ், மதுரை.
M. இஸ்மாயில் சாஹிப் அய்யன்கடை, தஞ்சாவூர்.

ஜீவரசம் கம்பெனி லிமிடெட்,
(2) காரைக்குடி S. I.

சந்தாதாரர்களுக்கு

## அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறு வருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு அவசியங்கள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தா நம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்த நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித அவசியமும் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

மதனகாமேஸ்வர லேகியம் (Regd)
பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே.
ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 8 அணா.
காலண்டரும் கேடலாக் இனாம்.
சித்த ஔஷதசாலை கம்பெனி K. A. S.
போஸ்ட் மூல்லச்சேரி, தென்மலையாளம்.

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப்பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதச்சஞ்சிகைகளில் முதன்மைபெற்றது; 2_,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப்போதிப்பது; 46-பக்கம் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும் வர்ண பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.
வருட சந்தா தபாற்கூலி யுள்பட
உள்நாடுகளுக்கு ரூ. 1—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0
ஆனந்த போதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
மதராஸ்.

## சுயமரியாதைச் சடங்குகளும் நன்கொடைகளும்.

இவ்வாண்டு தை-௴ 30-உயன்று ஜோ திருக்குமரிபுரம் என்னும் கிராமத்தில் வெங்கட்டராமு செட்டியார் மகன் ஸ்ரீமான் திருவேங்கட செட்டியாருக்கும் ஷை யூர் நாராயண செட்டியார் மகள் ஸ்ரீமதி சொக்கம்மாளுக்கும் பார்ப்பனப் புரோகிதமின்றியும் அர்த்தமற்ற சடங்குகளின்றியும் செலவு குன்றியும் தம் குலப் பெரியோர்களைக் கொண்டு சுயமரியாதைத் திருமணம் நடந்தது.

ஃ ஃ ஃ

உத்திரான்மேரூர்பட்டி டிவிஷன் மருதம் கிராமம் திருவாளர் கெ. தங்கவேலு முதலியார் 10-1-29ல் இறந்துபோன தமது தமையனாரின் குழந்தைக்கு இழவுச்சடங்கு பிராமணியத்தையும் புரோகிதத்தையும் அறவே ஒழித்து சுயமரியாதையின்படி பந்துமித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமிடப்பட்டு சிறப்பாய் நடத்தி 'குடி அரசு'க்கும் நன்கொடையாக அணா எட்டு அளித்தார்.

ஃ ஃ ஃ

சீடாமங்கலம் திரு அ. வீரசாமி, தமது தந்தையார் தாயார் முதலியவர்களின் திதிகளை சென்ற சித்திரை மாதம் முதல் பார்ப்பனர்களை அறவே ஒழித்து ஏழைகளுக்கு அன்னமளித்து சுயமரியாதை முறையில் நடத்திவருகிறார். ஷையாரின் மாப்பிள்ளை டிராயிங்மாஸ்டர் கோவை பாலசுந்தரம் பிள்ளையின் தந்தையின் இழவுச்சடங்கையும் பார்ப்பனர்களை ஒழித்து தஞ்சையில் சுயமரியாதை முறையில் ஏழைகளுக்கு சாப்பாடு போட்டு முடிக்கச்செய்தார்.

சிப்பால்க்கோட்டை பிரபல வர்த்தகரான திருவாளர் செ. சி. கருப்பையா நாடாவர்கள் அருமைப்புதல்வியரும் திரு வன்னியப்ப நாடாவர்கள் பாரியான திருமதி சண்முகவேல்த்தாயம்மாள் சென்ற ஆண்டு தைத் திங்கள் 25ம் நாள் இவ்வுலக வாழ்க்கையை நீடுமான நீத்தனர். அன்னவர்களுக்கு செய்த 9-வது நாளின் உத்திர கிரியை பார்ப்பனப் புரோகிதமின்றி சுயமரியாதை முறையில் குலப்பெரியோர்களால் நடத்தப்பட்டு பந்துமித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் விருந்து நடத்தப்பெற்று முடிக்கப்பெற்றது.

---


## விலாசம் தேவை,

வாழ்க்கையின்பம், காதற் பெருக்கு, பரவசமுதிர்ச்சி, புது ஊக்கம், தேகாரோக்கியம் என்னும் பாக்கியங்களை அடைய விரும்புவோர் விலாசத்தை தெரிவித்தால், 'ரகஸ்ய ரத்னம்' என்ற புத்தகத்தை இனாமாயும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்.

**சுகானந்த ஔஷதாலயம்**
தபாற் பெட்டி 222,
மதராஸ்.

---

## "குமரன்"

ஆசாரத் திருத்த நெறியில் நேர் நின்றுழைப்பது.

எல்லாரும் இன்புற்றிருப்பது
குமரன் கொண்ட நோக்கம்.

வைதிகக் கொடுமைகளையும் அசட்டு
வழக்கங்களையும் உடைத்தெறிந்து
மக்கட்கு நலம் புரிவதே
குமரன் கொள்கை.

உள்நாடு வருட சந்தா ரூ. 5—0—0.
வெளிநாடு „ ரூ. 6—0—0.

மானேஜர்,
தனவைசியன் கம்பேனி, லிமிடெட்,
காரைக்குடி (இராமநாதபுரம் ஜில்லா.

நீங்கள் அநேக மருந்துகளைச் சாப்பிட்டும் வியாதி தீராமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?



அப்படியானால் பழநி, சி. எம். சாமி

# குருதாம்பர பஸ்பம்

சாப்பிடுங்கள்.

**சகல வியாதிகளுக்குங்கைகண்டது.**

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து, மேகம், தடிப்புகள், மாறிவிட்டது. ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல், குன்மம், வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீர்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம் நற்சாக்ஷிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50-நாள் 100 வேளை பஸ்பம் அனுபானமும் விலை ரூ. 50. 25-நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ. 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

இனாமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரிபாக்கெட் விரும்புவோர் 2-அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு நிராதரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணமாகி போற்றுவதை கவனியுங்கள்.


எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒண்ணரை வருஷ காலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பர பஸ்பத்தால் பூரண குணமானான். மூலவியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான். ஆனதால் என் வியாதிக்குத்தக்க மருந்தனுப்பக்கோருகிறேன்.

11—4—27 A. M. துரைசாமி, 80-நிர்மார்க்கம் ரோடு, சூளை பெங்களூர்

## தாதுபுஷ்டிக்கு, பழநி, சி. எம். தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்.

வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்துபோன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்கிறது. தாது விர்த்தியை கொடுத்து புத்திர சந்தானத்தை உண்டுபண்ணும். பத்தியமில்லை, 24-நாள் பஸ்பம் விலை ரூ. 10-0-0 ஏராளமான நற்சாக்ஷிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுர்வேத வைத்திய ஆசிரியர்,
**C. மலையப்பசாமி** நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S. I.



# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

*Mysteries of Wedded Life.*

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட
இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**வாஸன் புஸ்தகசாலை,**
244, தாங்கசாலைவீதி, சென்னை.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

# மலையாளத்தில் பார்ப்பனீயம்.

(முன் தொடர்ச்சி)

'உண்மை விளம்பி' உரைப்பது.

தென் திருவிதாங்கூரில் மிகவும் பிரசித்தி பெற்ற புண்ணிய ஸ்தலக்ஷேத்திரமாகக் கருதப்படுவது சுசீந்திரமாகும். இங்கு கோயில் கொண்டிருக்கும் சுவாமியின் பெயர் தாணுமாலயன் (மும்மூர்த்திகளும் ஓர் காலத்தில் ஒன்று சேர்ந்து ஒரே மூர்த்தியாய் அமைந்தது) என்று ஸ்தல புராணங் கூறுகின்றது. ஊரின் பெயரை நோக்கினல் இந்திரன் சுசி அடைந்த புரமென விளங்குகின்றது. ஓர் காலத்தில் இந்திரன் செய்த அடாத காரியத்திற்காக அவனது உடம்பு முற்றும் ஆயிரம் யோனிகள் தோன்றிவிட்டன வென்றும், பின்னர் பன்னூறாண்டுகள் தவஞ் செய்ததின் பலனாய் அவ்யோனிகள் கண்களாய் மாறின வென்றும் பண்டைப் புராணங்கள் கூறுகின்றன. சாபத்தை நீக்குவதற்காக, இந்திரன் தவஞ் செய்த விடம் சுசீந்திர (புர) மென்றும் தனது வெள்ளை யானை ஐராவதத்தை ஏவ, அது மகேந்திரகிரியிலிருந்து தனது கோடுகொம்புகளால் பூமியைக்கீறிக்கொண்டே வர அவ்வழியாகப் புறப்பட்ட நதியே கோட்டாறு எனப் பெயர் பெற்றதென்றும் இதனால் இது மிகப் பழமையான நதியாகையால் பழையாறு என்று இப்பொழுது வழங்கப்படுகிறதென்றும் சுசீந்திரத்திற்குச் சுமார் இரண்டு மைலுக்கு வடமேற்காயிருக்கும் ஊருக்கு கோட்டாறு என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கின்றது என்றும் அப்புராணங்கள் கூறுகின்றன.

மேற் சொன்னபடி புறப்பட்ட ஆறு, இந்திரன் யாகம் முதலியவை இயற்றிய விடத்தில் வந்து நின்றது என்றும் இவ்விடத்திலேயே இப்பொழுது பொற்றாமரைத்தடாகம் அமைந்திருக்கிறதென்றும் இவ்விடத்தில் பல யாகம் செய்து இந்திரன் தூய்மையடைந்தான் என்றும் இத்தகைய புண்ணிய ஸ்தலத்தை எவ்விதக்குற்றஞ் செய்தவர் தரிசித்தாலும் தூய்மையடைவரென்பதும் மும்மூர்த்திகளை ஒரே சமயத்தில் ஒரே வடிவில தரிசிக்கிற பலனும் கிட்டும் என்பதும் இப்பக்கத்து மக்களின் நம்பிக்கை.

இவ்விடத்தில் வசிப்பவர்கள் யார்யாரெனின், பெருஞ் செல்வத்தையுடைய இக்கோவிலிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு காலங்கழிப்பவரே. இவ்வூரிலிருந்து சிறிது தூரத்திற்கப்பாலிருக்கும் ககாடு என்ற சேரியிலுள்ள சாம்போர் முதலிய 'தீண்டா' திருக்குலத்தினரின் வண்டி முதலியவை ஆற்றிலிறங்கியே போக வேண்டுமாயின் அதற்கு 'உயர் குல' த்தாருடைய அனுமதி வேண்டும். இன்றேல்வண்டியைக்கொண்டுபோக முடியாது. கோயிலைச்சுற்றியுள்ள அக்கிரகாரத்தினரும் அவருக்கடுத்தபடியாயுள்ள வேளாளரும் சுசீந்திரம் சத்தியாக்கிரகத்தின்போது தீண்டாக் குலத்தினருக்கு எதிராக ஒன்று சேர்ந்து கொண்ட விஷயம் யாவருமறிந்ததொன்றாகும். பொதுப் பணத்தைக் கொண்டு போடப்பட்டிருக்கிற--வருடந்தோறும் செப்பனிடப்படுகிற சுசீந்திரப்பாதைகளில் ஒரு குலத்தார் செல்லவாகாது எனத்தடுக்கப்பட்டு வந்ததை யொட்டியேசத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவதாக, இத்தகைய "புண்ணிய க்ஷேத்திரத்தின்" புராண வரலாற்றுப்படி பார்த்தாலும் அங்கு ஜாதி வித்தியாசமில்லை யென்பதும், இந்திரனைப் போன்ற பெரும் பாவங்களைச் செய்தவரும் அங்குள்ள கடவுளை வணங்கித் தூய்மை பெறலாமென்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. எனவே சிறிதும் குற்றமிழையாத தாழ்த்தப்பட்ட வகுப்பினரை அனுமதிக்காது தடுப்பது பெரும் அறியாமையும் ஆணவமுமாகும்.

உற்றுநோக்கின் இங்கோர் உண்மைபுலப்படும் அதாவது, எந்தப்போராட்டத்திலும், கோடாரிக்காம்புகளாய்ப் பிறந்திருக்கும் பிராமணரல்லாதாரே நம் இனத்தவரைத் தாழ்த்துவதற்குத் துணை புரிகிறார்களென்பது. நடந்த சுசீந்திரம் சத்தியாக்கிரகத்திலும் யார்யார்முன்வந்தார்கள். பார்ப்பனர் யாரேனும் உண்டா? இல்லவேஇல்லை. எல்லாம் சோற்றுத் தடியர்களான பார்ப்பனரல்லாதாரே, அதாவது பார்ப்பனர் வல்லாளர்கள் தூண்டிவிட்டுப்பின் நிற்பதே பார்ப்பனர்வேலை. எதாவது குரோதத்தைக் கிளப்பிவிட்டால் பார்ப்பனரல்லாத கோடரிக்காம்புகள் தலைவிரித்தாடும். நம் இனத்தவரை துன்புறுத்துகின்றோமே எனச் சிறிதும் நினைக்கமாட்டார்! கோவில் சோற்றுக்கு வழியில்லாமற் போய்விடுமேஎன்ற பயம் அவர்களுக்கதிகம். சுசீந்திரம் கோவிலைப்பற்றிய வருவாயே அங்குள்ளபார்ப்பனருக்கும்பிற 'உயர்ந்த' இனத்தவர்க்கும். எனவே தாழ்த்தப்பட்டவரை அனுமதித்துவிட்டால், தம்பிழைப்புக் கெட்டுப்போய்விடும் என்றபயம் ஒருபுறம் இதற்காக எதிர் சத்தியாகிரகஞ்செய்தாரேயன்றி வேறல்ல. வேறு காரணமுமில்லை. தாழ்த்தப்பட்டவர் வீதிகளில் வராதலால் வண்டிக்கூலி விறகுவெட்டுக்கூலி முதலியபலவும் அவர்கட்கே கிடைக்கின்றன. பார்ப்பனருக்குக் கோவிலினின்றும் பொருள் ஏராளமாகக் கிடைப்பதால், எவ்வளவு கொடுத்தாலும் அதைப் பற்றி அவர்கட்குக் கவலையில்லை.

என்வே பார்ப்பனீயத்தின் ஆட்சிக்குத்தோள் கொடுப்பவர் பிராமணரல்லாத கோடரிக் காம்புகளேயாகும். பிராமணரல்லாதார் யாவரும் ஒருமுகப்பட்டு நின்றால் தாழ்த்தப்பட்டவருடைய உரிமைகள் விரைவில் பாதுகாக்கப்படும். இந்திரனைத் தூய்மைபடுத்தியதாணுமாலைய மூர்த்திக்கு இவர்களுடைய மாசுற்றநெஞ்சைத் தூய்மைப் படுத்த மனம வரவில்லைபோலும்!

திருவாங்கூர் அரசாங்கத்தார் தேவஸ்தானவிஷயத்தில் செய்திருக்கும்சிலசீர்திருத்தங்கள் ஓரளவுக்கு போற்றற்குறியனவாகும். தேவஸ்தான இலாகாவை ஏற்படுத்தியதிலிருந்து கோவில் காரியங்களெல்லாம் சிறிது கவனமாகப் பார்க்கப்படுகின்றன. பெருச்சாளிகளுடைய மனம்போல் நடக்கத்தடை ஏற்பட்டுவிட்டது. இன்னுஞ்சிறிது முற்போக்கைக்கொண்டு கோவிலுட்சென்று கும்பிடவும் தெருவீதிவழி செல்லவும் மனிதராய்ப் பிறந்த எவருக்கும் உரிமையுண்டென உண்மையை நிலைநிறுத்தினல் மிகவும் நலமெனக் கூறுகிறேன். மிருகபலியை நிறுத்திய கவர்மெண்டார் மனித உரிமைகளின் பலியையும்நிறுத்த முன்வரவேண்டியது அவசியமாகும். ஒருகுலத்திற்கொரு நீதி வழங்கல் நியாயமன்று. யாவரையும் அனுமதிப்பதால் சுவாமி ஓடிவிடமாட்டார், அதனல் யாதொருவிதக் கெடுதியும் நேரிடாது நன்மையே உண்டாகும்.

பார்ப்பனீயம் ஒழிக! சமத்துவம் ஓங்குக!!
மூடத்தனம் மூழ்குக!!!

## செங்குந்தர் சங்கத்திறப்புவிழா
### வண்டியூர் மதுரை

சமீபத்தில் ஈரோட்டில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டின் தீர்மானங்களைச் செய்கையில் நிறைவேற்றுதல் வேண்டுமென்னும்கொள்கையுடன் மதுரையைச்சேர்ந்த வண்டியூரில் வதியும் செங்குந்தர்கள் புதியதாய் ஓர்சங்கம் 10-2-29 தில் யன்று ஸ்தாபித்தனர்.

# சிவலிங்க ரஹஸ்யமும் தமிழ் மக்களின் அறியாமையும்.

அறியாமையும் மூடநம்பிக்கையும் ஆகிய இவை இரண்டும்செய்விக்காத கெட்டசெய்கை கிடையாது. உதாரணமாக சாம்பலையும் மண்ணையும் முகத்திலும் உடம்பிலும் பூசிவிட்டு கழுத்திலும் கைகளிலும் ஏதேதோ கொட்டைமாலைகளை மாட்டி வெளியில் அனுப்பி வேடிக்கை பார்க்கிறது. இன்னும் பார்ப்பனர்கள் காயபித்து அதிகமாய்ப்போய் ஆண்குறியும் பெண்குறியும் பிரஜா விருத்தி சரீரசுகம் இழ்வாழ்க்கை இவைகளுக்கு முக்கியமான காரணமாக இருப்பதால் இவை தான் கடவுளாக பூஜிக்கப்பட வேண்டுமென்று சுமார் 200.வருஷங்களுக்குமுன் ஒருவழக்கத்தை எற்படுத்தினர்களாம். அப்பொழுது அறிவாளிகளான நம்மவர்கள் இந்தத் தீச்செயலை எல்லாவித உபாயங்களாலும் தடுக்கத்தொடங்கினார்கள். நம்மவர்களுக்கு பயந்து சிலர் இந்த 'கடவுள் வணக்க'த்தை ரகசியமாகவும் சிலர் 'பிரத்தியட்சக்கடவுளை' விட்டு மண்ணாலும் கல்லாலும் பெண்குறி ஆண்குறி இரண்டும் சேர்ந்திருக்கும் விதமாகச்செய்து அதை வணங்கியும் மற்றுஞ் சிலர் முழுமனிதவடிவம் நிர்வாணமாகச்செய்து அதைவணங்கிவந்தார்களாம். பிறகுகொஞ்சம்கொஞ்சமாக இந்தக்கடவுள்கள் உயர்ந்தவிலையுள்ள புடவை உடுத்துகிறதும் விபசார உற்சவம் செய்கிறதுமான சாமிகளாக மாறிவிட்டன. ஆஹா இந்த சாமிகளுக்குத்தான் நம்மவர்கள் வருஷாவருஷம் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து நாசமாக்குகிறார்கள். பெரிய மதில், சின்ன பிராகாரம் கட்டி தங்கள் அறியாமையின் ஞாபகச்சின்னத்தை நிலைநாட்டுகிறார்கள்! பால் பழம் சர்க்கரைகொண்டு தினம் 5 வேளை பூஜை செய்து ஆண் பெண் குறிகளுக்குசுடவி வழித்துக்கொடுக்கிற பஞ்சாமிர்தத்தை கொஞ்சம் போதும் (மிகவும் கொஞ்சமாக, ஏனென்றால் பார்ப்பன பூசாரி கணக்காகத்தான் கொடுப்பான்) தின்று கடைத்தேறி விட்டதாக நினைக்கிறார்கள்! தமிழர்களே! சுயபுத்திக்கு மேன்மைகொடுத்து பட்சபாதமில்லாமல் தினமும் 2 நாழி சோமாவது சம்பல் பூசுதல்யானைத்தலைகடவுள், மூன்றுதலைச்சாமி ஒத்தைக்கால் தெய்வம், முதலியவற்றை ஆராய்ந்துபார்த்தால் இந்த ஆபாசத்தின் உண்மைவிளங்காமல் போகாது. இனிமேலாவது ஒவ்வொரு ஊரிலும் கோவில் என்பவற்றில்உள்ள சாமி என்பவற்றை பெயர்த்து தூரவைத்துவிட்டு அதனுடைய வருமானத்தைக்கொண்டு ஏழைப்பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடமும் அறிவு வளர்ச்சிக்காக புத்தகாலயமும் ஏற்படுத்தி நாட்டை சுயமரியாதை உள்ளதாகச்செய்யுங்கள். இன்னும்இந்த ஆண்குறி பெண்குறி தெய்வங்களை கும்பிட்டுக்கொண்டும் சாம்பலை பூசியும் சாணியைத்தின்றுகொண்டுமே இருந்தால் பின்னல் இன்னும் எதைத்தான் தின்ன நேரிடுமே தெரியாது. இவ்வளவு காலம் அறியாமையில் கிடந்து நஷ்டமும் கஷ்டமும் பட்டது போதும், போதும். கடைசியில் நீங்கள் பூசிக்கும் லிங்கம், என்ன என்பதை மேனாட்டார் தெரிந்துகொண்டு உங்களை பரிகாசம் செய்கிறார்கள் என்பதை நினைப்பூட்டுகிறேன். பிற சொல்லுவானேன். நமக்கே நம்முடைய இந்த வெட்கக்கேடான ஆசாரத்தில் அவமானத்தினல் தலை குனிந்து போகிறதில்லை. என்? இது அறியாமை! மூடநம்பிக்கை!!

அனுதாபி

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(12-ம் கட்டுரைத் தொடர்ச்சி)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்)

தசரதன் வேட்டையாடி உயிர்க்கொலை செய்வதில் மிகவும் விருப்பமுடையவனென்பது அவனுடைய பேச்சியிலிருந்தே தெரிய வருகிறது. இராமனும் அத்தகையனென்பது முன் கட்டுரைகளில் விவரிக்கப்பட்டது. தசரதன் தன் அம்பால் சாகக்கிடந்த முனி மகனைக் கண்டபோது அவன் 'மன்னா! நான் சூத்திரப் பெண்ணுக்கும் வைசியனுக்கும் பிறந்தவன். ஆகையால் என்னைக் கொன்றதால் உனக்கு பிரமஹத்தி வந்து சேராது' என்று கூறுகின்றதாக வால்மீகி கூறுகிறார். இதைப்போலும் அநியாயம் வேறுண்டோ? ஈதெல்லாம் ஆரியருடைய பித்தலாட்டங்கள். ஆரியர்களுடைய நீதிகள் ஆணுக்கு வேறு பெண்ணுக்கு வேறு, ஒரு குலத்துக்கு வேறு மற்றொரு குலத்துக்கு வேறு. தமிழ் மக்களுடைய நீதிகளோ அனைவருக்கும் ஒன்றுபோலிருக்கும். இதனைத் திருக்குறளில் காணலாம். இதனாலேயே அறிஞர் சுந்தரம் பிள்ளையும் 'வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற நன்கு உணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி' என்றுரைத்திருக்கின்றனர்.

இவ்விடத்து மொழி பெயர்ப்பாளர் திருவாளர் சீனிவாசய்யங்கார் குறிப்பு கவனிக்கத்தக்கது. அது வருமாறு (பக்கம் 262) 'இங்கேயொரு விஷயம் கவனிக்கத்தக்கது. தசரதன் கொன்றவன் வைசிய பிதாவிற்கும் சூத்ர மாதாவிற்கும் பிறந்தவன். ஆகையால் சங்கர ஜாதியைச் சேர்ந்தவன். அவனுடைய முன்னோர்கள் தவத்தால் உத்தமலோகங்களை அடைந்ததாகச் சொல்லப்படுகிறது. அவன் வேதங்களை அத்யயனஞ் செய்ததாகவும் அக்னிஹோத்திரங்களைச் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் இந்த உரிமைகள் பிராஹ்மண க்ஷத்திரிய வைசியர்களென்ற முப்பிறப்பினருக்கு உண்டென்று சொன்னாலும், கேவலம் வைசியனல்லாமல் சூத்திர ஸ்திரீ வயிற்றில் பிறந்தவனுக்கு அந்த உரிமையுண்டா? சூத்ரஸ்திரீக்கும தவம் செய்யும் உரிமையுண்டா? வானப்ரஸ்த ஆச்ரமத்தை அவர்கள் அனுஷ்டித்ததாகக் காண்கிறோம். ஆனால் ராமன் ராஜ்யபாலனஞ் செய்யும்பொழுது ஒரு பிராமணனுடைய புத்திரன் அகாலத்தில் மரணமடைய அதற்கு அரசனுடைய அக்கிரமே காரணமென்று அந்த பிதா அரண்மனை வாசலில் வந்து முறையிட்டார். ராமன் தன் ராஜ்யத்தில் அக்ரமத்தைச் செய்கிறவன் யாரென்று தேடிக் கண்டகாரண்யத்தில் சம்பூகனென்ற சூத்ரன் தவஞ்செய்யக் கண்டு அவனைக் கொன்றார். உடனே அந்த பிராமணச்சிறுவன் பிழைத்தானென்று உத்தர காண்டத்தில் 73, 76 ஸர்க்கங்களில் காண்கிறோம். இவ்விரண்டும் எப்படிப் பொருந்தும்?'

இதுவே நமது ஐயங்காருடைய குறிப்பு. இதனால் தசரதன் காலத்தில் சங்கர வகுப்பாளொருவனே தவம் செய்து நல்ல பதவி பெற்றிருக்க அவனினும் உயர்ந்த சூத்திரனொருவன் இராமன் காலத்தில் தவம் செய்தது பெருங் குற்றமாகக் கருதப்பட்டிருக்கிறது. இதனால் நாளடைவில் பார்ப்பனருடைய ஆதிக்கம் வலுக்க வலுக்க 'சூத்திரர்' முதலியோர் தாழ்த்தப்பட்டிருக்கின்றார்களென்பது தெரிகிறது. ஆரியருள்ளும் பார்ப்பனர் முதலிய சாதிகள் அவரவர் தொழிலாலேயே ஏற்பட்டிருக்கிறது. நாளடைவில் அச்சாதிகளே தனித்தனியாகப் பிரிந்து விட்டனர். பின்னர் ஏற்றத்தாழ்ச்சிகளும் உண்டாயின. பின்னர், ஏற்றம்பெற்றோர் தாழ்ந்தோரை நசுக்கித்தாம் வாழப்பாராயினர். இராமாயணத்தை முதன் முதலாக எழுதின வால்மீகி முனிவரே முதலில் வேடனாக இருந்தவர். பின்னர் அவருடைய தவப்பெருமையால் பார்ப்பனராயினர். ஆனால் அவர் அந்நிலையில் உயர்ந்தவனாகிய முனிவன் வாயினால் முனிவனாகிய தன்னைக் கொன்றதிலிருந்து தசரதனுக்குப் பிரமஹத்தி வருவதில்லை என்று கூறியதாக எழுதியிருப்பது அவரது சுயநலத்தையே குறிக்கும். பின்னர் சூத்திரனாகிய ஒருவன் தவம் செய்தது உலகத்துக்கே பெருங் கேடு தருவதாகும் என இராமன் நம்பி அம்முனிவனைக் கொன்றானென எழுதியிருப்பதும் அவரது சுயநலமே. ஆகலின சுயநலக்காரர் பலர் சேர்ந்துகொண்டு பிறரைத் தாழ்த்தி அவர்கள் கேட்டால் தம் நலம் பேணுமாறு துணிந்தனரென்பது இதனால் தெற்றென விளங்குகின்றது. தசரதன் காலத்தில் வைசியனொருவன் சூத்திரப்பெண்ணைக் கலியாணஞ் செய்து கொண்டு ஒரு மகனைப் பெற்றான். அம்மகனும் தவம் செய்து பெருமை பெற்றான். வைசிய முனிவன் தந்தசாபம் தசரதனையும் சூழ்ந்து பலித்தது என்று காணப்படும் உண்மைக்கு மாறாக இராமன் காலத்தில் ஓர் சூத்திரன் தவம் செய்தமையால் ஒரு பார்ப்பனச் சிறுவன் செத்தானென்பது அறிவுடையார் ஒப்புமாறில்லை. இதனால் இச்செய்திகளெல்லாம் மேல் வகுப்பினர் பிறரைத் தாழ்த்துமாறு எழுதி வைத்த சூழ்ச்சிகளே யன்றி வேறில்லை.

இராமன் உண்மையில் தெய்வத்தன்மையுடையனேயாயின் அப்பார்ப்பனச் சிறுவன் உயிர்பெற்றெழச் செய்திருக்கலாமே. அதை விடுத்து அவன் ஓர் உயிர்க்கொலை அதுவும் உலகப்பற்றை ஒழித்து இறைவழி நின்று தவமுதிர்வெய்திய ஓர் உயிர்க்கொலை செய்தனனும்; அதனால் பார்ப்பனச் சிறுவன் உயிர்பெற்றனனும், இது அறிவுடைய நன் மக்கள் கூற்றாமா? மனிதரனைவரும் கடவுளுடைய மக்களேயாக அவர் முன் குல வேறுபாடும் அக்குலங்களிலும் ஒரு குலத்துக்கு ஒரு நீதியுமா? என்னே அநியாயம்! இக்கொலை பாதகனாகிய இராமனையும் தெய்வமாக வழிபடுகின்றனரே! பாவம், பாவம்! ஆனால் இக்காலத்தில் இவ்வாரியருள் ஒரே ஒரு குலந்தான் இருக்கிறது. அது பார்ப்பன வகுப்பே. ஏனைய க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வகுப்பெல்லாம் அழிந்தொழிந்தன. இப்பார்ப்பனரோ தமிழ் மக்களுடன் நெருங்கிப்பழகி தாம் உயர்ந்த வகுப்பினரென்று தம்மின் வேறான தமிழ்மக்களாகிய மற்றையோரனைவரும் சூத்திரர்களென்றும் கூறலாயினர். இதனைத் தமிழ் மக்களிற் பெரும்பாலோர் உண்மையென நம்புவாராயினர். ஆரியருக்கும் தமிழருக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையாதலின் தமிழ் மக்களுக்கு ஏனையோர்கள் எப்படி வேறு பட்ட வகுப்பினரோ அதைப்போலவே ஆரியப் பார்ப்பனரும் வேறு பட்ட வகுப்பினரே. ஆதலின் தமிழ்மக்களனைவரும் இப்பார்ப்பனர் தம்மைச் சூத்திரரெனக் கூறுவதைக் கேட்டிருத்தல் பரிதாபமே. தமிழ் மக்கள் பண்டைக்காலத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்கு பெரும் பகுதியினராயிருந்தனரெனவும் இவர்கள் தம்முள் தொழில் முறையில் வேறுபாட்டைத் தவிர வேறு கொள்வினை கொடுப்பினை, உடனுறைவு, உடனுண்ணல் முதலியவற்றிலும் வேறுபாடில்லை [illegible] பண்டைத் தமிழ் நூல்கள் அறிவிக்கின்றன. ஆகலின் தமிழ் மக்கள் தம்முள் பிறருடைய [illegible] யால் அமைந்த [illegible] வேறுபாடுகளை ஒழித்து ஒன்றுபடவேண்டும். ஒன்று பட்டாலே வாழ்வுண்டு. ஒன்று படாதவரை தாழ்வே. ஆதலின் தமிழ் மக்களனைவரும் வேறுபாடுகளையொழித்து விரைவில் ஒன்று பட்டுப் பெருவாழ்வடைய முன்வரவேண்டும். பிறர் தம்மைச் சூத்திரர் என்ற இழி பெயரால் அழையாமலிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். சில சமயப் பிரசங்கிகள் பிரசங்க மேடையேறியோ அல்லது சந்திகளில் நின்று கொண்டோ நம் முன் நிற்கும் அந்நிய சமயத்தினரை நோக்கி "அஞ்ஞானிகளே! நீங்கள் ஞான மார்க்கமாகிய எங்கள் மதத்தில் வந்து சேருங்கள்" என்று பிரசங்கமியற்றுவதையும் அதை அவர்முன் நிற்போர் கேட்பதையும், பின் அப்பிரசங்கம் செய்தவருடன் பழகும்போது 'நாங்கள் அஞ்ஞானிகள்" என்று கூறி அவர் கூற்றை உடம்படுவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அஞ்ஞானி என்றால் அறிவில்லாதவன் என்பது பொருள். ஆனால் இப்பொருளைத் தெரிந்த எவனாவது தன்னை மற்றொருவன் அஞ்ஞானியென்று கூறவோ தானும் தன்னையே அஞ்ஞானி என்று கூறிக்கொள்ளவோ செய்வானா? உண்மையில் அஞ்ஞானியாயிருப்பவன்கூட இத்தகைய இழிசெயலுக்கு உடன்படான். இதைப் போலவே ஆரியப் பார்ப்பனர் தமிழ் மக்களனைவரையும் 'சூத்திர' ரென்றே அழைக்கின்றனர்; இவர்களும் அவர்கள் முன்னிலையில் 'நாங்கள் சூத்திரர் தொட்டுவிடாதீர்கள்' என்று கூறி விலகியும் போகின்றனர். ஆரியரைத் தொடுவதோ, அல்லது அவர்கள் உண்ணுவதைப் பார்ப்பதோ பாவமெனவும் சிலர் தவறுதலாக நம்புகின்றனர். ஆனால் சூத்திரன் என்ற சொல்லுக்குப் பொருளை இவர்கள் அறிவரேல் பிறர் தம்மை அப்பெயரிட்டழைக்க உடன்படார் என்பது திண்ணம். சூத்திரன் என்றால் வைப்பாட்டி மகன், அடிமை என்று பொருள். உண்மையில் தப்பான நடையுடையவள் மகன் கூடத் தன்னைப் பிறர் அவ்வாறழைக்க உடன் படானே! அவ்வாறிருக்க மிக மேலான வடுப்படாக்குலத்தினரான தமிழ் மக்கள் பிறர் தம்மைச் சூத்திரன் என மிகக் கேவலமான பெயரிட்டழைக்கக் கேட்டிருப்பது மிகவும் விந்தையே! ஆகலின் இனியேனும் இத்தவறு நடைபெறாதென்பது தற்காலத்தில் ஒவ்வொருவரும் சுயமரியாதை உணர்ச்சி பெற்று விளங்குவதிலிருந்து தெளிவாகிறது. மிக உயர்ந்த நிலையும் நல்லறிவும் தமிழ் மக்களிடைத் தோன்றுவதாக.

ஆயின் ஆரியர் தம்முள்ளமைந்திருந்த நான்கு சாதியுள்ளே தற்போது காணப்படும் பார்ப்பன வகுப்பைத் தவிர ஏனைய க்ஷத்திரிய வைசிய சூத்திர வகுப்புகள் எங்கு மறைந்தன, எவ்வாறு மறைந்தன? என்றால் [illegible] தனித்தனியே [illegible] போது அவ்வகுப்பு வேறுபாடுகளை ஒழித்துவிடுமென்பது திண்ணம். [illegible] வாழும் நம்நாட்டினர் [illegible] அவ்விடங்களில் வாழும்போது [illegible] என்பது உலகமறிந்த உண்மை. [illegible] இங்கிலாந்து முதலிய பிறநாட்டினரும் [illegible] பல வகுப்பினர் [illegible] ஒன்றுபட்டே வாழ்வது [illegible]. இப்போது நம்நாட்டில் வாழும் [illegible] தம்முள் ஒற்றுமைகாட்டியே வாழ்கின்றனர். இதைப்போல [illegible] தனித்தனியே [illegible] போது அவர் தம்முள்ளிருந்த சாதி வேறுபாடு நாளடைவில் ஒழிவதாயிற்று. ஆதலால் அவர்கள் அனைவரும் தம்முள் உயர்ந்த வகுப்பாகிய பார்ப்பன வகுப்பினரொ

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# "பெரிய புராணம்"

## "சுந்தர மூர்த்தி சுவாமிகள்"

திருநெல்வேலி
எஸ். குற்றாலலிங்கம் எழுவது.

### (கட்டுரை 1)

### முன்னுரை.

தமிழ் நாட்டில் சைவ சமயத்தாரென்போர்கள் 'பெரிய புராணம்' தங்கள் சமயத்தின் 'உயிர்' என உரைக்கின்றனர்கள். அவர்கள் உரையை நம்பி பெரிய புராணத்தை எவரேனும் வாசித்தால் பெரிய புராணம் சைவ சமயத்தின் உயிரோவென ஐயப்பாடடைய நேரிடும். ஏனெனின் பெரிய புராணத்தில் பொய்யும், புளுகும், புரட்டும், நயவஞ்சகங்களும், நம்பொணாத செயல்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட ஓர் புராணம் சைவ சமயத்திற்கு உயிராயிருந்தால், உடலாகிய சைவ சமயத்தின் பெருமையை என்னென்று கூறற்றகும்.

பெரிய புராணத்தை சைவசமயத்தின் உயிரெனச்சொல்லுவது பிழை என்றே நாம் கூறுவோம். பெரிய புராணத்துக் கதைகளெல்லாம் இற்றைக்கு முன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் நடந்ததெனக் கூறப்படுகிறது. ஆனால் சைவ சமயம் எண்ணிறந்த ஆண்டுகளுக்கு முன்பே சிவபெருமானால் தமிழர்க்குத் தரப்பட்டதெனச் சொல்லப்படுகிறது. இஃது உண்மையாயின், சைவ சமயம் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக உயிரில்லாத ஓர் சமயமாகவிருந்ததா? இருப்பின் உயிரற்ற ஓர் சமயத்தையா சிவபெருமான் தமிழர்களுக்குக் கொடுத்தார்? உயிரற்ற ஓர் சமயத்தை சிவபெருமான் ஒருக்காலும் தமிழர்களுக்கு ஈந்திருக்கமாட்டார். ஆகவின் சைவ சமயத்தை சிவபெருமான் தமிழர்களுக்கு ஈந்தாரென்று சொல்லுவதும், அச்சமயத்தை உடலாகக் கருதி பெரிய புராணத்தை உயிராகக்கொள்ளுவதும், கொண்டு உரைப்பதுவும் முற்றும் பிசகு, முற்றும் பிசகு. 'பெரிய புராணம்' சைவ சமயத்திற்கு உயிரல்லவென்பது வெள்ளிடைமலை.

பெரிய புராணம், பொய்யும், புளுகும், புரட்டும், நயவஞ்சகமும், நம்பொணாத செயல்களும் நிறைந்த ஒரு நூலெனச் சொல்லுவதால், சைவ சமயத்தார், சைவ சமயத்தில் அன்புடையார் எவரும் நம்மேல் வெறுப்புக் கொள்ளமாட்டாரென்றே கருதுகின்றோம். வெறுப்புக் கொள்ளினும் அவ்வெறுப்புக்கு நாம் ஒரு சிறிதும் கவலையோ, அன்றி அச்சமோ கொள்ளப்போகின்றோமன்று. இனி கட்டுரையைத் தொடங்குவாம்.

### சுந்தரர் முற்பிறப்பு.

'ஆதிகாலத்திலே திருக்கைலாச பதியாகிய சிவபெருமான்' தமது திருவுருவத்தைக் கண்ணாடியிலே பார்த்து "சுந்தரா வா" என்று அழைத்தாராம். சிவபெருமான் அழைத்ததும் மிகுந்த அழகு வாய்ந்த ஒருவர் சிவபெருமான்முன் தோன்றினாராம். அவர் மிகுந்த அழகைப் பெற்றிருந்தமையினால் அவருக்குச் "சுந்தரர்" என்னும் நாமம் சூட்டப்பட்டதாம். அந்தச் சுந்தரர், ஒரு காலத்து பாற் கடலினின்று தோன்றிய ஆலாகால விடத்தைச் சிவபெருமான் உண்ணும் பொருட்டு தனது உள்ளங்கையில் அடக்கிக் கொண்டு கொடுத்ததினால் அவர் "ஆலாலசுந்தரர்" என்று அழைக்கப்பட்டாராம். அந்த ஆலால சுந்தரர் சிவபெருமானுக்குப் பூமாலை தொடுத்துச் சாத்தி, விபூதிக்கலம் தாங்கித் தொண்டு செய்து வந்தாராம். ஒரு கால் சிவபெருமானுக்கு பூமாலை தொடுத்து அணியும் பொருட்டு நந்தவனத்திற்குச் சென்று மலர் கொய்து நிற்கையில் சிவபெருமானின் மனைவியாகிய உமாதேவியாருக்கு மலர் தொடுத்துச் சாத்துவதற்கு அந்த நந்தவனத்தில் பூப்பறித்துக்கொண்டிருந்த உமாதேவியாரின் சேடியர்களாகிய "அநிந்திதை", "கமலினி" என்னும் இரண்டு பெண்பாலரின் அழகைக் கண்டு சுந்தரர் இச்சைகொண்டாராம். இதையறிந்த சிவபெருமான் சுந்தரரை நோக்கி "நந்தவனத்திலே உமாதேவியாரின் சேடியர்களாகிய "அநிந்திதை", "கமலினி" என்பவர்களை நீ காதலித்ததினால் உலகத்திற் பிறந்து அவ்விருவரையும் மனைவியாகப் பெற்று வாழ்ந்த பின்னர் மீண்டும் ஈண்டணைக" என்றுரைத்தாராம். அதற்குச் சுந்தரர் மக்கட் பிறப்பினலாய் மயங்குங்கால் "அடியேனைத் தடுத்தாளவேண்டும்" என்று சிவபெருமானிடம் வேண்டிக்கொள்ள சிவபெருமானும் இணங்கினாராம்.

சிவபெருமான் கண்ணாடியைப்பார்த்ததாகச்சொல்லப்படுகிறது. சிவபெருமான் தன்னுடைய அழகை தான் நோக்குவதற்காகவே கண்ணாடியைப் பார்த்திருத்தல் வேண்டும். தன்னுடைய அழகை தான் அறிவதற்கு கண்ணாடியைப் பார்த்ததினால் சிவபெருமானுக்கு தன்னுடைய அழகை தானே அறிகின்ற சக்தியில்லையென்பது தெளிவாகிறது. தன்னுடைய அழகை தானே அறிகின்ற சக்தியற்ற 'சிவ பெருமானை' மக்கள் கடவுளெனக் கருதி வழிபடுதல் அறிவுடைமை யன்றென்றே கூறற்றகும்.

சிவபெருமான் கண்ணாடியைப் பார்த்து "சுந்தரா! வா" என்று அழைத்ததும் அழகு வாய்ந்த 'மானிட' உருவமொன்று அவர் முன் வந்ததாம். தன்னுடைய அழகை கண்ணாடியின் உதவியின்றி தானே அறிய முடியாத ஓர் கடவுள், கண்ணாடியில் தன்னுடைய பிரதிபிம்பத்தின அழகைக்கண்டு "சுந்தரா! வா" என அழைத்ததும் அழகு வாய்ந்த மானிட உருவமொன்று வந்ததெனக்கூறுவதும் எவ்வளவு பொய்ம்மையென்று வாசிக்கும் நண்பர்களே ஆராய்ச்சி செய்யும்படி வேண்டுகின்றோம்.

சிவபெருமான் கண்ணாடியைப் பார்த்து "சுந்தரா! வா" என்று அழைத்ததும் அழகு வாய்ந்த உருவமெடுத்து வந்ததாகச் சொல்லப்படும் சுந்தரர், பாற்கடலினின்றும் கொண்டு வந்த விஷத்தை உண்ணும்படியான சிவபெருமானின் அன்பைப் பெற்றதாகச் சொல்லப்படும் சுந்தரர், எப்பொழுதும் சிவபெருமானையே நினைத்து தொண்டு செய்து கொண்டு வந்ததாகப் பகரப்படும் சுந்தரர், நந்தவனத்தில் "அநிந்திதை" "கமலினி" என்னும் இரண்டு பெண்களைக் கண்டதும், தான் சிவபெருமானிடத்து வைத்த அன்பைமாற்றி அப்பெண்களின் மேல் இச்சை கொண்டமை அறிவீனமும் இழி தொழிலுமல்லாமல் வேறு என்ன? அறிவுடைய மக்கள், அறிவீனமும் இழி தொழிலுங் கொண்ட ஆலால சுந்தரரையும், அவர் சரிதமெனச் சொல்லப்படும் இப்பொய்க் கதையினைத் தாங்கி நிற்கும் பெரிய புராணத்தையும் குறை கூறாமல் எங்ஙனம் போற்ற முடியும்?

ஆலால சுந்தரர் அறிவீனத்தால் உமாதேவி (தன் மனைவி)யாரின் சேடியர்களை இச்சித்ததினால் சிவபெருமான் ஆலால சுந்தரரை நோக்கி "நந்தவனத்திலே உமாதேவியாரின் சேடியர்களாகிய அநிந்திதை, கமலினி யென்பவர்களை நீ காதலித்ததினால் உலகத்தில் பிறந்து அவ்விருவரையும் மனைவியராகப் பெற்று வாழ்ந்த பின்னர் ஈண்டணைக" என்று கட்டளையிட்டிருக்கிறார். சிவபெருமானின் தன்னலத்தையும் முட்டாள் தனத்தையும் என்னென்று எடுத்தெழுதுவது! சிவ பெருமான் சுந்தரரைப்பார்த்து "உமாதேவியாரின் சேடியர்களை நீ காதலித்ததினால்" என்று சொல்லியிருப்பதிலிருந்து சிவபெருமான் தன்னுடைய மனைவியின் சேடியர்களைக் காதலித்து விட்டான், இனி இவனையும் அந்தச் சேடியர்களையும் இங்கு (கைலாசத்தில்) வைத்திருந்தால் தனக்குக் கெட்ட பெயர் கிடைத்து விடுமென்ற பயத்தினாலோ, அல்லது இனி தன் மனைவியாகிய உமாதேவியாரையே காதலித்தாலும் காதலித்து விடுவானென்ற பயத்தினாலோ என்னவோ தன்னலங்கொண்டு ஆலால சுந்தரரை மன்னித்தருளாமல் உலகத்தில் போய் பிறக்கும்படி கட்டளையிட்டு விட்டார்.

சிவபெருமான் ஆலால சுந்தரரை மட்டும் உலகத்தில் போய் பிறக்கச் சொல்லாமல் "அநிந்திதை" "கமலினி" இருவரையும் உலகத்தில் போய் பிறந்து சுந்தரருக்கு மனைவியராக உத்திரவிட்டிருக்கிறார். இந்தச் சிவபெருமான் அரசாங்கத்தில் (முன்னிலையில்) நடந்த அநியாயமான தீர்ப்பு, எங்கான் எந்த அரசாங்கத்திலுமில்லையென்றே சொல்லலாம்.

ஒருவன் காமவெறியினால் ஒரு பெண்ணை யிழுத்து விட்டானென்றால் உடனே அரசாங்கத்தார் அவனையும் அந்தப் பெண்ணையும் மற்றும் சாக்ஷிகளையும் விஜாரித்து, பெண்ணின் சம்மதமின்றி அவன் காமங்கொண்டிழுத்திருந்தால் அரசாங்கத்தார் அவனை ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடமோ தண்டித்து ஜயிலுக்கு அனுப்புவார்களேயல்லாமல் அந்தப் பெண்ணுக்கும் கடின தண்டனை கொடுத்து ஜெயிலுக்கனுப்பி, அவனுடைய காமவெறியைத் தணிக்கும்படி உத்திரவிடமாட்டார்கள்.

சிவபெருமானோ அங்ஙனமின்றி ஆலால சுந்தரரை உலகத்திற்கு அனுப்பினது மட்டுமல்லாமல், அநிந்திதையையும் கமலினியை

## செங்கல்பட்டில்

# முதலாவது மாகாண சுயமரியாதை மகாநாடு.

## தென்னிந்தியா இதுவரை கண்டிராத காட்சி.

36 மைல் தூரம் நூற்றுக்கணக்கான மோட்டார்களில் ஊர்வலம்.
வழிநெடுக வரவேற்பும், சாலைச்சிறப்பும், ஜனநெருக்கமும்,
மைதானக்காட்சியும் பந்தலலங்காரமும் பீபிள்ஸ் பார்க்கை தோற்கடித்து விட்டன.
ஆயிரக்கணக்கான விளக்குகள் பதினாயிரக்கணக்கான கொடிகள்,
எண்ணிறந்த தோரணங்கள், நூற்றுக்கணக்கான வளைவுகள்,
வண்டி வண்டியான புஷ்பமாரிகளால் தலைவர்கள் புஷ்பக்குவியலுக்குள் திக்குமுக்காடி விட்டார்கள்.
வெளிமாகாண உள்மாகாண ராஜாக்களும், மந்திரிகளும், அதிகாரிகளும்,
ஜமீன்தாரர்களும் பெண்களும் தாழ்த்தப்பட்டவர்களும் பண்டிதர்களும் பாமரர்களும்
எங்கும் கண்டிராத அளவு குழுமி இருந்தார்கள்.

### ஊர்வலம்.

தென்னிந்தியாவானது இது வரைக்கண்டிராத காட்சியைச் செங்கற்பட்டில் கண்டது. ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குச் சென்னையிலிருந்து செங்கல்பட்டிற்கு ஊர்வலம் புறப்படுவதாக ஏற்பாடு செய்திருந்தாலும் குறிப்பிட்ட தலைவர்கள் எல்லாம் வந்து சேர 8-30 மணியாகிவிட்டது. சுமார் 100 மோட்டார் கார்களும் 20, 30 பஸ்களும் சரியாய் ஒன்பது மணிக்கு தியாகராய மண்டபத்தில் இருந்து ஜே! சப்தம் முழங்க ஊர்வலம் துவக்கப்பட்டது. ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜாயிருந்த கேப்டன் டி. சுந்தரராவ் அவர்களின் வண்டி முதலில் வழிகாட்ட அடுத்த வண்டியில் மகாநாட்டைத் திறக்கும் கனம் மந்திரி Dr. சுப்பராயன் அவர்களும் கனம் சேதுரத்தினமையர் அவர்களும் இரண்டாவது வண்டியில் கனம் மந்திரி முத்தையா முதலியார் அவர்கள் கனம் பழயகோட்டை பட்டக்காரர் அவர்களும் மூன்றாவது வண்டியில் வரவேற்பு அக்கிராசனர் ராவ் பகதூர் எஸ். இருதயசாமி அவர்களும் நிரை வரிசையாக கோவை, திருச்சி, திருநெல்வேலி, தென்னாற்காடு, தஞ்சை, சேலம் முதலிய ஜில்லா போர்ட் தலைவர்களும் மதுரை சேலம் முதலிய முனிசிபல் தலைவர்களும் மதுரை உத்தமபாளையம் சோமசுந்தர முதலியார் அவர்களும் தாலூகா போர்ட் தலைவர்களும் இவைகளின் அங்கத்தினர்களும் சட்ட சபைப்பிரதிநிதிகளும் மற்றும் சென்னைப்பிரமுகர்களும் வெளிஜில்லாபிரமுகர்களும் வரிசைவரிசையாக புறப்பட்டார்கள். வண்டிகள் சென்னை எல்லையை விட்டு தாண்டியதும் மந்திரிகளுக்கும் ஈ. வெ. ராமசாமிக்கும் தலைவர் பாண்டியனுக்கும் மற்றும் பல பெரியோர்களுக்கும் வழி நெடுக வண்டிகளை நிறுத்தி நிறுத்தி ஊர் ஊருக்கு வளைவுகளும் பந்தல்களும் மேளதாளங்களும் ஏற்படுத்தி இருந்த இடங்களில் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்து கொடுத்ததும் மாலைகளும் சிற்றுண்டிகள், பழங்களும் போட்டோ படங்கள் எடுப்பதுமான காட்சிகளே நடந்தவண்ணமாக இருந்தன. வழியில் மகாநாட்டுத்தலைவர் திரு. சௌந்திரபாண்டியனாரும் திருவாளர்கள் மகாநாட்டுக் கொடி உயர்த்தும் பி. டி. ராஜனும் பனகால் அரசர் படம் திறக்கும் கனம் கிருஷ்ண நாயரும் வந்து சேர்ந்து கொண்டார்கள். வண்டிகள் மணிக்கு 30 முதல் 40 மைலில் வேகம் குறையாமல் பறந்தும் வழி நெடுக வரவேற்புகள் பெற்று செங்கல்பட்டு வந்து சேர 11-30 மணி ஆய்விட்டது. சாலையில் வழி நெடுக உள்ள ஆயிரக்கணக்கான தென்னைமரங்கள் சுண்ணாம்பு பூசி அடியில் செம்மண் பூசி இருந்த காட்சி வழி நெடுக போலீஸ் சேவகர்கள் நிற்பது போலவே இருந்தது.

### செங்கல்பட்டு வைபவம்

செங்கல்பட்டு முனிசிபல் எல்லைக்கு வந்த அப்பொழுது நாகசுரம் நகார் அதிர்வேட்டுகள் ஜே சப்தங்கள் முதலியவை இடிகள் போல் ஒலிக்க ஆரம்பத்தில் சுமார் 10000 ஜனங்கள் போல் இருந்து கொடிகள் ஆட்டியவாறும் வேஷ்டிகள் வீசியவாறும் வரவேற்று பெரிய வண்டியில் தலைவர்களை ஒன்றாகவுட்கார வைத்து மாலைகள் போட்டு உதிர்புஷ்பங்களை வண்டிகளிலிருந்து ஒவ்வொருவரும் அள்ளி அள்ளி வீசி தலைவர்கள் புஷ்பக்குவியலுக்குள் மறைந்து திக்குமுக்காடும்படி இறைத்தார்கள். வீதிகள் எல்லாம் மஞ்சள் வெல்வெட்டு விரிப்பு விரித்தது போலவே புஷ்பங்கள் வாரி இறைத்த காட்சி காணப்பட்டது. சுமார் இரண்டு பர்லாங்கு தூரம் ஊர் வலம் வந்ததும் ஊர்வலம் நகருவதற்கு முடியாமல் ஜனங்கள் சுமார் 20, 30 ஆயிரம் பேர்கள் போல வழி நெடுக வந்து கூடிவிட்டார்கள். சுமார் ஒரு மைல் செல்லுவதற்கு ஒரு மணிநேரமாய் விட்டதென்றே சொல்லலாம். ஊர்வல ஆரம்பத்திலிருந்து மகாநாட்டுப் பந்தல்வரை ஒன்றரை மைலுக்கும் ஒரே தொடர்ச்சியாக கம்பங்கள் நட்டு அவற்றுக்கு கொடித்தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

### பந்தலலங்காரம்.

மகாநாட்டு மைதானத்தின் முன் புறம் ரோட்டு புதிதாய் ஜல்லி போட்டிருந்தது. முதல் பிரவேச பந்தல் சலவைக்கல் கட்டடம் எனவே மதிக்கத்தகுந்த மாதிரி சுமார் 20 அடி உயரத்திற்கு மேலாகவே போட்டு ஆயிரம் கொடிகள் போல கட்டி 100க்கணக்கான கலசங்கள் வைத்து பார்வைக்கு ஒரு பெரிய கவாப்பு அரண்மனை வாயிலாகவே காணப்பட்டது. ஒவ்வொருவரும் கையில் தொட்டுப் பார்த்த பிறகே அது துணிகளின் மீது வர்ணங்களால் தீட்டப்பட்டது என்று அறிய முடிந்தது. மைதானத்திற்குள்ளும் சுமார், 3, 4 பர்லாங்சுற்றளவுக்கு வளைந்து வரிசையாக அலங்கரித்த கடைகளை ஏற்படுத்தி, விட்டு விட்டு பொருள் கண்காட்சிகளும், தொழிற்கண்காட்சிகளும் ஒரு புறமும் ஆங்கில முறை ஓட்டல்கள் சிற்றுண்டிசாலைகள், விவசாயக்கண்காட்சிகள், யந்திரக்கண் காட்சிகள் ஒரு புறமும். மகாநாடுசம்மந்தமான நிர்வாக கூட்டங்கள், வாசகசாலைகள் முதலியவைகள் மத்தியிலும் இடை இடையே பெரிய பெரிய உருவச்சிலைகளும் பதுமைகளும் நிறுத்தப்பட்டும் சிறு சிறு நந்தவனங்களாக பிரித்து அலங்கரித்த புஷ்பச் செடிகளும் சுமார் 2000 தோரணவிளக்குகள் வரை மைதானத்தைச்சுற்றிலும் மரங்களின் மீதும் கொடிகளின் மீதும் மரத்துக்கு மரம் கொடிக்கு கொடி தோரணங்களாக கட்டப் பட்டிருந்ததோடு மகாநாட்டுப் பந்தலின் முன்புறம் பெரிய அரண்மனை மண்டபம்போல்கட்டப்பட்டு பெரிய பெரியசிகரங்களும்குளோப்புகளும்கலசங்களும் வைத்து அவைகளின் மேல் கொடிகள் பறக்க விட்டு காந்த விளக்குகளால் சுபமரி

பாதையே பிறப்புரிமை என்று எழுதப்பட்டு காந்த விளக்குக் கென்றே ஒரு தனி இஞ்சின் வேலை செய்ய சுமார் அதில் ஒரு ஆயிரம் விளக்குகள் மகாநாட்டுப் பந்தல் அலங்காரத்தில் முன்புறமும் மற்ற பக்கத்திலும் பல வர்ணங்களில் எரிய, அவ்வளவு பெரிய பந்தல் முழுதும் உட்புறத்திலும் மேற்புறத்திலும் நான்கு பக்கங்களிலும் ஓலைகள் தெரியாமல் துணிகள் கட்ட காகிதத் தோரணங்களும் கொடிகளும் பொம்மைகளும் காகிதப் பூக்களும் கொண்டு அலங்கரித்து பெட்ரோமேக்ஸ் காஸ் விளக்குகள் பந்தலுக்குள் இருமருங்கிலும் தோரணங்கள் போல் வரிசையாகத் தொங்கவிட்டு, 4, 5 இடங்களில் லௌட்ஸ்பீக்கர் என்னும் ஒலிக்கருவி கட்டப்பட்டு மேடையில் சுமார் 500 பேர்கள் மாத்திரம் கொள்ளும்படி நாற்காலிகளும் மேடையின் இருமருங்கிலும் ஒரு புறம் பெண்களும் ஒரு புறம் வரவேற்பு அங்கத்தினர்களும் முன்புறம் பிரதிநிதிகளும் உட்கார்ந்திருந்த மாதிரி அமைத்து இருந்ததானது பொதுஜன அன்பையும் பக்தியையும் பெற்ற ஒரு பெரிய சக்கரவர்த்தி முடி சூட்டு வைபவக்காட்சி போலவே இருந்தது.

### விஜயம் செய்தார்கள்.

ஊர்வலம் பந்தலுக்குள் வருவதற்குமுன் பிரதிநிதிகள் பந்தலுக்குள்ளும் மேடைக்குள்ளும் நிறைந்து விட்டார்கள். மகாநாட்டுக்கு ராமநாதபுரம் ராஜா, வெங்கிட்டகிரி ராஜா, பழைய கோட்டை பட்டக்காரர் முதலிய ஜமீன்தார்களும் சென்னை மாகாணத்து முன் மந்திரிகளும், மத்தியமாகாண மந்திரி திரு ராகவேந்திரராவ் நாயுடுவும், நிர்வாக சபை இந்திய அங்கத்தினர்கள் திருவாளர்கள் கனம் கிருஷ்ண நாயர், கனம் மகமது உஸ்மான் ஆகியவர்களும், அரசாங்க காரியதரிசி திரு வெங்கிட்டநாராயணாவும், ஸ்மால்காஸ் கோர்ட் சீப் ஜட்ஜி தணிகாசலமும், சென்னை கார்ப்பரேஷன் தலைவர், தியாகராயர் குமாரர் பி. டி. குமாரசாமியும் மற்றும் திருவாளர்கள் எ. டி. பன்னீர் செல்வம், குமாரசாமி செட்டியார் W. P. A சௌந்திரபாண்டிய நாடார், சி. என். இரத்தினசபாபதி, டி. எம். நாராயணசாமி பிள்ளை ஸார் கே. கிருஷ்ணசாமி நாயுடு, என். அல்லப்பசெட்டியார், எம். கே. கிருஷ்ணசாமி. நெல்லூர் ராமச்சந்திர ரெட்டியார் முதலிய சுமார் 10 ஜில்லா போர்ட் பிரசிடெண்டுகளும், திருவாளர்கள் எ. ராமசாமி, பத்மநாப முதலியார், ஆர். என். நாயுடு, சௌந்தர நாடார், அப்துல் ரசாக் சாயபு, தம்மண்ண செட்டியார், வேதாசலம், வி. கோவிந்தராஜுலு முதலிய சுமார் முப்பது முனிசிபல் சேர்மென்களும் திருவாளர் ஷண்முகம் பிள்ளை, ராஜம் நாயுடு, ரங்கசாமி செட்டியார், உமாமகேஸ்வரம், ஐ. குமாரசாமி முதலிய 20, 30 தாலூகா போர்டு தலைவர்களும் சுமார் 1000 பேர்களுக்கு மேற்பட்ட ஜில்லா, தாலூகா போர்டு, முனிசிபல் மெம்பர்களும் சற்றேறக்குறைய எல்லா சட்டசபை அங்கத்தினர்களும், திரு எ. [illegible] முதலியார் முதலிய [illegible] பண்டிதர்களும், திருவாளர்கள் உத்தமபாளையம் சோமசுந்தர முதலியார், போன்ற 500 பிரசுரதார்களும் முத்தை நாடார், ஆரியா, கண்ணப்பர், முருகப்பா தாவுத்ஷா போன்ற நூற்றுக்கணக்கான பத்திராதிபர்களும் ஸ்ரீமதி நாயகம் போன்ற 600, 700 பெண்மணிகளும் அநேக பிரமுகர்களும் செட்டிநாட்டிலிருந்து வையிசு ஷண்முகம், சொ. முருகப்பா, அருணாசலம் முதலிய நாட்டுக்கோட்டை கனவான்களும், திருவாளர்கள் பண்டிட் ஆனந்தம், சாமி சகஜானந்தர், கோவை வீரய்யா, மதுரை பிள்ளை சிவராஜ் முதலிய கொடுமைப் படுத்தப்பட்ட வகுப்பு 400, 500 பிரதிநிதிகளும், திருநெல்வேலி, மதுரை, திருச்சி தஞ்சை, தென்னார்க்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம், கோவை முதலிய தமிழ் ஜில்லாக்களிலிருந்து ஜில்லாவுக்கு 400, 500 பிரதிநிதிகளுக்கு குறையாமல் சில ஜில்லாக்களிலில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் பல ஜில்லாக்களிலிருந்தும் ஸ்திரீகள் பிரதிநிதிகளாக சுமார் 600, 700 சீமாட்டிகளும் தொழிலாளிகளில் பல பாகங்களிலிருந்தும் சாமியுல் நடேச முதலியார் காளியப்பன் போன்ற சுமார் ஆயிரம் தொழிலாளிகளும் புதுச்சேரியிலிருந்து திரு ராஜகோபால் தலைமையில் 40, 50 பிரதிநிதிகளும், திருவாங்கூரிலிருந்து 40, 50 பிரதிநிதிகளும்,

### வெளிமாகாணப் பிரதிநிதிகள்.

மைசூரிலிருந்து மைசூர் சட்டசபை மெம்பர் திரு மீலகிரி சஞ்சீவப்பா தலைமையில் 20, 30 பிரதிநிதிகளும் மற்றும் லாகூர், பம்பாய், கல்கத்தா மத்திய மாகாணம் முதலிய இடங்களிலிருந்து பல பிரதிநிதிகளும் மலேயா நாட்டிலிருந்து [illegible] ஓட்டல் சொந்தக்காரர் திரு எஸ். ராஜு அவர்கள் தலைமையில் 10, 20 பிரதிநிதிகளும் மற்றும் ஆந்திராவிலிருந்து திரு. சி. வி. ரங்கம் செட்டியார் [illegible] பல பிரதிநிதிகளுடனும் மற்றும் ஒத்துழையாமையில் ஈடுபட்டு ஒரு வருஷம், இரண்டு வருஷம், மூன்று வருஷம், ஒன்று, இரண்டு மூன்று நான்கு, ஐந்து தடவை சிறை சென்றவர்களும் ஒத்துழையாமையை [illegible] ஸ்வராஜ்பக்ஷியைச் சேர்ந்தவர்களும் காங்கிரஸ் [illegible]வாதம்—ஆமிதவாதம்—[illegible]—ஜஸ்டிஸ் கக்ஷி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் முழு சுதந்திரம் வேண்டியவர்களும் பார்ப்பனர்களும் மகமதியர்களும் கிறிஸ்தவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் [illegible]சமாஜக்காரர்களும் வைணவ சமயக்காரர்களும் [illegible] சமயத்தார்களும் ஆரிய சமாஜிகளும் பிரம்மஞான சங்கக்காரர்களும் வெள்ளைக்காரரும் வெள்ளைக்கார பாதிரிகளும் வெள்ளைக்கார மாதுகளும் பத்திராதிபர்களும் மேல் கண்ட துறைகளில் ஈடுபட்டு பிரசாரம் செய்யும் தொண்டர்களும், பண்டிதர்களும் புராணப் பிரசாரகர்களும், சன்யாசிகளும் [illegible]ர்களும், கோவில் டிரஸ்டிகளும், இந்து மத பரிபாலன போர்ட் தலைவர்கள் அங்கத்தினர்கள், தேவஸ்தானக் கமிட்டி தலைவர்கள் அங்கத்தினர்கள் டிரஸ்டிகள் குருக்கள் அர்ச்சகர்கள்—சர்க்கார் நிர்வாக அதிகாரிகள் சர்க்கார் காரியதரிசிகள் உத்தியோகத்திலிருக்கும் ஜில்லா ஜட்ஜி, சப் ஜட்ஜிகள் ஸ்மால்கோர்ட் ஜட்ஜிகள் கலெக்டர்கள் டிப்டி கலெக்டர்கள் மற்றும் மாதம் 1000 2000 ரூபாய் பெறும் உத்தியோகஸ்தர்கள் சில்லரை உத்தியோகஸ்தர்கள் ராஜாக்கள் ஜமீன்தார்களும் குடியானவர்களும் கூலிக்காரர்களும் பெண்களில் மாங்கல்ய ஸ்திரீகள் என்பவர்களும் விதவைகள் என்பவர்களும் கன்னிகைகள் என்பவர்களும் தாசிகள் என்பவர்களும் மற்றும் எல்லாப் பிரிவுக்காரர்களும் பிரதிநிதிகளாய் வந்திருந்தது இதில் முக்கியமாய்க் குறிப்பிடத்தக்கதாகும்.

### மகாநாட்டு நடவடிக்கைகள்.

18-தேதி காலை செங்கல்பட்டு நாயக்கர் கொட்டகையில் மகாநாடு கூடியவுடன் திருவாளர் பி. டி. ராஜன் அவர்கள் சுயமரியாதைக் கொடியை உயர்த்தினார். (கொடியேற்று விழா சொற்பொழிவு 6ம் பக்கம் காண்க.)

பிறகு சென்னை கார்ப்பரேஷன் தலைவர் திரு. எ. ராமசாமி அவர்கள் அக்கிராசனத்தில் சென்னை அரசாங்க சட்டமெம்பர் கனம் எம். கிருஷ்ணன் நாயர் பனகால் அரசர் உருவப்படத்தைத் திறந்துவைத்தார். திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் எல்லோருக்கும் வந்தனம்கூறி பகல் சாப்பாட்டுக்காக மகாநாட்டை ஒத்திவைத்தார்.

### பிற்பகல்.

சாப்பாடு முடிந்தவுடன் மந்திரிமார்களுக்கு உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தபிறகு மகாநாட்டு விவசாயக்காட்சியையும் கைத்தொழில் பொருட்காட்சியையும் திறந்துவைக்கும்படி திரு ஈ. வெ. ராமசாமி அவர்கள் அரசாங்கமந்திரி கனம் திரு. எஸ். முத்தையா அவர்களைக் கேட்டுக்கொள்ள கனம் முதலியார் அவர்கள் பொருட்காட்சியைத் திறந்துவைத்தார் பிறகு முதல்மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களின் உருவப்படத்தை அரசாங்கமந்திரி கனம் சேதுரத்தினம் அவர்கள் தலைமையில் அரசாங்க போலீஸ்மெம்பர் கனம சர் முகம்மது உஸ்மான் அவர்கள் திறந்துவைத்தார் இவர்களுக்கு திரு. கே. வி. மேனன் வந்தனம் சொல்லிய பிறகு வரவேற்புதலைவர் வேண்டுகோளின் பேரில் டாக்டர் சுப்பராயன் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைத்தார்.

[திறப்பு விழா சொற்பொழிவை 6ம் பக்கம் பார்க்க] பிறகு திருவாளர்கள் பி. டி. ராஜனும் ஈ. வெ. ராமசாமியும் உண்டி [illegible] பெட்டியில் பணம் போடும்படி கேட்டுக்கொண்டார்கள்.

### வரவேற்பு உபன்யாசம்

செங்கல்பட்டு ஜில்லா போர்டு பிரசிடெண்டும் [illegible] திரு. எம். கிருஷ்ணசாமி அவர்கள் தமது வரவேற்பு உபன்யாசத்தைப் படித்தார்.

### தலைவர் தேர்தல்.

திருவாளர் ஈ. வெ. ராமசாமி மகாநாட்டுத் தலைவரை பிரேரேபித்தார். இப்பிரேரேபணையை திருவாளர்கள் பி. டி. குமாரசாமி, ஜே. சிவராஜ் எம். எல். சி. ஆரிய ராவ்பகதூர் ஏ. டி. பன்னீர்செல்வம், நாயகம் அம்மாள், பி. எ. [illegible] எல். சி. முதலியவர்கள் ஆதரித்தபிறகு பெருத்த கைதட்டல் ஆரவாரத்திடையே நிறைவேறியது.

(இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.)

# செங்கற்பட்டு மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## சைமன் கமிஷன்.

(எ) இந்தியாவிலுள்ள பல வகுப்பாரின் உரிமைகளும் அபிப்பிராயங்களும் ஒன்றுக்கொன்று மாறாக இருப்பதால் இந்திய அரசியல் விசாரணைக் கமிஷனில் இந்த பலவகுப்புப் பிரதிநிதிகளையும் நியமிப்பது சாத்தியமல்லவென்று இந்தியா மந்திரி பார்லிமெண்டில் கூறியிருப்பதாலும் இந்தியர்களில் எல்லா சமூகத்தாருக்கும் நம்பிக்கை கொடுக்கக்கூடிய ஒருவரைச் சேர்க்க முடியாத நிலைமையில் நமது தேசம் இருக்கிறபடியாலும் இந்திய அங்கத்தினர் நியமிக்கப்படவில்லையென்னும் காரணத்தைக் கொண்டு கமிஷனை பகிஷ்கரிப்பது நியாயம் அல்லவென்று இம்மகாநாடு கருதுகின்றது.

(பி) பிரிட்டிஷ் பார்லிமெண்டார் இந்தியதேசத்தை ஆண்டு வருகிற உரிமையையும் இந்திய அரசாங்கத்தை நிர்வகித்து வருகிறதையும் இந்த தேசத்திலுள்ள எல்லா ராஜீயகட்சியும் ஏற்று அடங்கி ஒத்துழைத்து வருகிற இக்காலத்தில் அதே பார்லிமெண்டால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் முன் சாட்சியம் சொல்வது இந்தியரின் சுயமரியாதைக்கு விரோதமென்று சொல்லுதல் பொருத்த முள்ளதல்லவென்று இம்மகாநாடு கருதுகின்றது.

(சி) ஆகையால் சைமன் கமிஷனர் தீர்க்காலோசனையின் பேரில் பார்லிமெண்டாருக்கு அனுப்பும் அறிக்கையில் சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்களும் கொள்கைகளும் கூடிய சீக்கிரம் நிறைவேறுவதற்கு மார்க்கங்களைத் தேடுவார்களென இம்மகாநாடு எதிர்பார்க்கின்றது.

## நேரு கமிட்டித் திட்டம்.

இம்மகாநாடு சமூக மதத் துறைகளிலே மாத்திரம் சீர்திருத்தம் செய்யும் வேலையை மேற்கொண்டிருந்தாலும், நேரு கமிட்டி அறிக்கையானது நமது இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு விரோதமாயிருக்கிறபடியால் அதனைக் கண்டிப்பதுடன் இந்தியாவின் வருங்காலத்து அரசியல் திட்ட அமைப்பில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒப்புக்கொள்ளப்படவேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்துகிறது.

## ஜாதிபேதம்.

(எ) மக்கள் பிறவியினால் உயர் தாழ்வு உண்டு என்ற கொள்கையை இம்மகாநாடு அடியோடு மறுப்பதுடன் அதை ஆதரிக்கிற மதம், வேதம், சாஸ்திரம், புராணங்களையெல்லாம் பொது ஜனங்கள் பின்பற்றக்கூடாதென்றும்,

(பி) வருணாசிரமமென்ற கொடுமையான கட்டுப்பாட்டையும் சமுதாய முறையில் காணப்படும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் முதலிய ஆட்சேபகரமான பிரிவுகளையும் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும்,

(சி) மனிதாபிமானத்திற்கும், தேசமுன்னேற்றத்திற்கும் தடையான தீண்டாமையென்பதை ஒழித்து எல்லாப் பொதுஸ்தாபனங்கள், குளங்கள், கிணறுகள், பாடசாலைகள், சத்திரங்கள், தண்ணீர்ப்பந்தல்கள், கோவில்கள் முதலியபொது ஸ்தாபனங்களை தட்டுத்தடங்கலின்றி அநுபவிக்கச் சகல ஜனங்களுக்கும் சம உரிமைகொடுக்கவேண்டு மென்றும் தீர்மானிக்கிறது.

(டி) இவைகள் நிறைவேறச்செய்யப்படும் பிரசாரமும் முயற்சியும் ஒரு சில சுயநல வகுப்பாரின் மத சம்மந்தமானபிடிவாதத்தினாலும் முட்டுக்கட்டையினாலும் போதிய அளவு சித்திபெறாமலிருப்பதால், இதற்காக அரசாங்கச்சட்டம் அவசியம் என்று கருதுகிறபடியால், சட்டசபைப்பிரதிநிதிகளும், சர்க்காரும் தக்க ஏற்பாடு செய்து பொது ஜன முயற்சிக்கு உதவிபுரிய வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

## ஜாதிப்பட்டமும் மதக்குறியும்.

(எ) மக்கள் தங்கள் பெயர்களோடு ஜாதி அல்லது வகுப்பைக் காட்டுவதற்காகச் சேர்க்கப்படும் பட்டங்களை விட்டு விட வேண்டுமென்று இம் மகாநாடு பொது ஜனங்களைக் கேட்டுக்கொள்கிறது.

(பி) ஜாதி அல்லது சமயப்பிரிவுகளைக் காட்டும் குறிகளை யாரும் அணிந்து கொள்ளக் கூடாதென்றும் கேட்டுக்கொள்கிறது.

## கலியாணம் முதலிய சடங்குகள்.

"பெண்களின் கலியாண வயது 16-க்கு மேற்பட்டிருக்க வேண்டுமென்றும், மனைவி புருஷன் இருவரில் ஒருவருக்கொருவர் ஒத்துவாழ இஷ்டமில்லாதபோது, அம்முறையான ஒப்பந்தத்தை ரத்து செய்துகொள்ள உரிமை யிருக்கவேண்டுமென்றும், விதவைகள் மறு விவாகம் செய்துகொள்வதற்கு உதவி செய்ய வேண்டுமென்றும் கலியாணம் செய்துகொள்ள விரும்பும் ஆண்களும் பெண்களும் ஜாதிமத பேதமின்றி தங்கள் தங்கள் மனைவி புருஷர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள பூரண உரிமை யளிக்கப்பட வேண்டுமென்றும், அதற்கேற்றவாறு, கல்யாணச்சட்டங்கள் திருத்தப்படவேண்டுமென்றும், கல்யாணம் முதலிய சடங்குகள் சொற்ப பணச்செலவில் நடத்தப்படவேண்டுமென்றும், கல்யாணத்தை முன்னிட்டும் ஒரு நாளைக்கு மேலாவது ஒரு விருந்துக்கு மேலாவது நடத்தக்கூடாதென்றும் தீர்மானிக்கிறது.

## கல்வி.

(எ) "கல்வி ஸ்தாபனங்களிலே தாய்ப்பாஷையும் பொது பாஷையாக அரசாங்க பாஷையும் தவிர மற்ற பாஷைப் படிப்புக்காகப் பொதுப் பணத்தை உபயோகிக்கக்கூடாதென்றும்,

(பி) பள்ளிக்குப் போகத்தக்க சிறுவர் சிறுமிகளுக்கு ஆரம்பக்கட்டாயக்கல்வி மாத்திரம் பொது நிதிகளிலிருந்து போதிக்கப்படவேண்டுமென்றும்,

(சி) உயர்தரக் கல்விக்குப் பொதுநிதிகளைச் செலவழிக்கக் கூடாதென்றும். அப்படிச் செலவழிக்கப்பட வேண்டிய அவசியமிருந்தால் வகுப்புவாரி விகிதப்படி மாணவர்களைத் தெரிந்தெடுத்துப் போதிக்க வேண்டுமென்றும்,

(டி) மற்ற வகுப்புப் பிள்ளைகள் சமமாகக் கல்வி அடைகிறவரையிலும், தீண்டாதவர்கள் என்று சொல்லப்படுகிற வகுப்பினரின் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் புத்தகம் உண்டி, உடை முதலியவற்றை இலவசமாக அளிக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

## கோவில் மடம் முதலியன.

(எ) கடவுள் என்பதின் பேரால் கோவில்களிலாவது அல்லது வேறு இடங்களிலாவது ஒரு பைசாவாவது ஒரு பைசா பெறும்படியான சாமானாவது செலவழிக்கக்கூடாதென்றும் வணங்குகிறவனுக்கும் வணங்கப்படுபவனுக்கும் மத்தியில் தரகனாவது வட பாஷையாவது இருக்கக்கூடாதென்றும் இம்மகாநாடு கருதுகிறது.

(பி) இனிமேல் புதிதாய் ஒரு கோவிலும் கட்டக்கூடாதென்றும் இப்போதிருக்கிற கோவில் மடம் சத்திரம் வேத பாடசாலை முதலியவைகளுக்காக விட்டிருக்கும்சொத்துக்களைக் கைத்தொழில், வியாபாரம், ஆராய்ச்சி, முதலிய கல்விகளுக்காகவும் கைத்தொழிலுக்காகவும் செலவழிக்க முயற்சி செய்ய வேண்டுமாய்ப் பொது ஜனங்களை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

(சி) கோவில்களில் உற்சவங்கள் முதலிய கொண்டாடுவதை நிறுத்திக் கொண்டு அவற்றிற்குப் பதிலாகப் பொதுஜன அறிவு வளர்ச்சி ஆரோக்கிய வளர்ச்சி பொருளாதார வளர்ச்சி முதலியன சம்மந்தமான பொருட்காட்சிகளை நடத்தி மக்களுக்கு அறிவும் செல்வமும் ஏற்படச்செய்யவேண்டுமாய் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

## பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கடம்.

பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் மற்றைய பயிற்சி சாலைகளிலும் பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு விரோதமான ஒரு வகுப்பார்களே எல்லாத் துறைகளிலும் பெரும்பாலும் உபாத்தியாயர்களாகவும் பரீட்சாதிகாரிகளாகவும் இருப்பதால் பார்ப்பனரல்லாதாருக்கு நியாயம் கிடைக்காமலிருப்பதால் ஒரு கமிட்டி நியமித்து அதைச் சரிவர விசாரித்து தக்கது செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமாய் அரசாங்கத்தையும் சட்டசபை மெம்பர்களையும் இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

"(அ) இனிமேல் சர்க்கார் தர்க்காஸ்து நிலம் கொடுப்பதெல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் என்பவர்களுக்கும், மற்றும் தங்களுக்கு நிலமில்லாதவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டுமென்றும் அதிலும் இப்போது தீண்டாதார் எனப்படுவோருக்கு விசேட சலுகை காட்டி நிலங்களை பண்படுத்தி பயிர்செய்ய பணஉதவி செய்ய வேண்டுமென்றும் (ஆ) தீண்டாதார் எனப்படுவோருக்கு சர்க்காரில் காலியாகும் உத்தியோகங்களில் முதல் உரிமை கொடுக்கவேண்டுமென்றும், (இ) மற்ற வகுப்பு சிறுவர் சிறுமிகளின் அந்தஸ்தை அடையும் வரைக்கும் தீண்டப்படாதார் என்று சொல்லப்படுபவர்களின் சிறுமிகளுக்குப் பள்ளிக்கூடங்களில் புத்தகம், உடை, உண்டி முதலியனவற்றை இலவசமாய் அளிக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

## மூடப்பழக்க வழக்கங்கள்.

"மூட நம்பிக்கைகளையுடைய எந்த புஸ்தகங்களையும் பாட புத்தகமாகப் பள்ளிக்கூடங்களில் வைக்கக்கூடாதென்றும் உபாத்தியாயர்களைப் பயிற்சிக்கும் பள்ளிக்கூடங்களிலும் மூட நம்பிக்கையுள்ள பாடங்களைக் கற்பிக்கக் கூடாதென்கிற நிபந்தனை விதிக்கவேண்டுமென்றும், பகுத்தறிவு தன்முயற்சி ஆராய்ச்சி முதலியவைகளுக்கு அநுகூலமான விஷயங்களையே பாடமாக வைக்கவேண்டுமென்றும், டெக்ஸ்ட்புக் கமிட்டியாரும் அறிவையும் தன் முயற்சியையும் உண்டாக்கக்கூடிய புத்தகங்களையே சிபார்சு செய்யவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது"

## பெண்களுக்குச் சுதந்திரம்

"(அ) பெண்களுக்கு ஆண்களைப்போலவே சமமாகச் சொத்துரிமைகளும் வாரிசு பாத்தியதைகளும் கொடுக்கப்படவேண்டுமென்றும்,

(ஆ) பெண்களும் ஆண்களைப்போலவே எந்த தொழிலையும் மேற்கொண்டு நடத்தி வருவதற்கு அவர்களுக்குச் சம உரிமையும் அவகாசமும் கொடுக்கப்பட வேண்டுமென்றும்,

(இ) பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் வேலையில் பெண்களே அதிகமாக நியமிக்கப்படுவதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், ஆரம்பக்கல்வி கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர் வேலைக்குப் பெண்களையே நியமிக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது"

## நாடகங்களும் சினிமாக்களும்

"நூலாசிரியர்கள் நாடகாசிரியர்கள், நடிகர்கள் நாடகநிலையச் சொந்தக்காரர், சினிமாபடக் காட்சிக்காரர் முதலியோர் பகுத்தறிவுக்கும் நியாய நேர்மைக்கும் எதிரிடையானதும், சுய நம்பிக்கையையும் சுயமரியாதையையும் குன்றச்செய்வதும் அல்லது தவறானதும் பகுத்தறிவுக்கு மாறானதுமான மதக்கொள்கைகளைப் பிரசாரம் செய்வது

(இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
மனத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உண்மையிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ௗு மாசி-மீ 13-உ.

## செங்கல்பட்டு மகாநாட்டின் தீர்மானங்கள்.

இரண்டு மூன்று மாதகாலமாய் தென்னிந்தியா முழுவதும் ஒரே பேச்சாயிருந்த முதலாவது சுயமரியாதை மாகாண மகாநாடு செங்கற்பட்டில் இம்மாதம் 17, 18-ம் தேதிகளில் வெகு விமரிசையாகவும் மிக்க ஆடம்பரமாகவும் கூடி பல தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு கலைந்து விட்டது. வெகு சொற்ப நாட்களுக்குள்ளாகவே செங்கல்பட்டில் இந்த மாகாண மகாநாடு நடத்தத் தீர்மானித்ததால் போதுமான சாவகாசமில்லாதிருந்துங்கூட செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ராவ்பகதூர் கே. கிருஷ்ணசாமி யவர்கள் முயற்சியாலும் செங்கற்பட்டு சேர்மன் திரு. வேதாசலனாரவர்கள் ஊக்கத்தாலும் செங்கற்பட்டு பிரபுவும் ஜமீன்தாருமான அப்பாசாமி வள்ளலாரின் வள்ளல் தன்மையாலும், 'திராவிடன்' பத்திராதிபர் திரு. கண்ணப்பரின் இடையறா உழைப்பாலும் மற்றும் அநேக கனதனவான்களின் உதவியாலும் தென்னிந்தியாவில் இதுவரை எங்கும் நடந்திராத மகாநாடு போல் இம்மகாநாடு நடந்தேறிவிட்டதும் மகாநாட்டின் பிரதிநிதிகளிலும் இதுவரை எந்த மகாநாட்டிலும் கூடாதமாதிரி எல்லாக் காரர்களும் ஏராளமாக வந்து கூடியிருந்ததும் குறிப்பிடத்தக்கதேயாகும்.

முதலாவதாக வைதிகர்கள் கூட்டமும் இரண்டாவதாகப் பண்டிதர்கள் கூட்டமும் மூன்றாவதாக ராஜாக்கள், மந்திரிகள், ஜமீன்தார்கள், உத்தியோகஸ்தர்கள், ஆங்கிலம் படித்தவர்கள், செல்வவந்தர்கள், மிராசுதாரர்கள், வியாபாரிகள் முதலியவர்களின் கூட்டமும் எதிர்பாராத அளவில் விஜயம் செய்திருந்தது மிகவும் குறிப்பிடத்தகுந்ததாகும். மற்றபடி பெண்மணிகள், தொழிலாளர்கள், ஏழை மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், கொடுமை செய்யப்பட்டவர்கள் ஆகியவர்கள் மற்ற எல்லாரையும்விட அதிகமாகக் கூடியிருந்தாலும் அவர்களே மகாநாட்டுக்குச் சொந்தக்காரர்களானதினால் அவர்கள் வந்திருந்ததில் நாம் ஒன்றும் அதிசயப்படுவதற்கில்லை. எனவே இம்மாதிரி குறிப்பிடத் தகுந்த அளவு மகாநாட்டின் பெருமைகள் ஒரு புறமிருக்க மகாநாட்டின் தீர்மானங்களைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

இம்மகாநாட்டில் சுமார் இருபது தீர்மானங்கள் வரை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவைகளில் சைமன் கமிஷன் பகிஷ்காரம் கூடாது என்றும் நேரு கமிட்டி ரிபோர்ட்டை பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் செய்யப்பட்ட தீர்மானங்களைப்பற்றி அரசியல் துறையில் இருப்பவர்கள் என்பவர்களில் ஒரு சிறு சாராருக்கு அபிப்பிராயபேதமிருக்கலாம். அதற்கு நம்முடைய சமாதானம் என்னவென்றால், முதலாவதாக நமது சுயமரியாதை இயக்கத்தில் அரசியல் நிர்வாக சம்மந்தமான சீர்திருத்த விஷயங்களைப்பற்றிய பேச்சுகளுக்கு இடமில்லை என்பது யாவரும் அறிந்ததேயாகும். ஆனால் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளும் திட்டங்களும் நிறைவேற்றப்படும் போது ஜனங்களின் உதவியை எப்படி எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றதோ அது போலவே அரசாங்க உதவியையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆதலால் அந்த அளவுக்கு அரசியல் தீர்மானம் இருந்துதான் தீரவேண்டியிருக்கின்றது. இன்றைக்கும் சுயமரியாதைக் கொள்கைகளில் அநேக விஷயங்களை நிறைவேற்ற வொட்டாமல் செய்ய நமது எதிரிகள் அரசாங்கத்தின் துணையை எதிர்பார்க்கின்றதை நாம் பார்க்கின்றோம். அநேக விஷயங்கள் அரசாங்க சட்டத்தின் மூலம் செய்யப்பட வேண்டியிருக்கின்றதையும் உணர்ந்து அவைகளுக்கு சட்ட சபைகளின் மூலம் சட்டம் செய்ய முயன்று கொண்டும் இருக்கின்றோம்.

உதாரணமாக, ஆண்களுக்கொரு சட்டம், பெண்களுக்கொரு சட்டம் என்பதாகவும், பார்ப்பனருக்கொரு சட்டம் பார்ப்பனரல்லாதாருக்கொரு சட்டம் என்பதாகவும் உயர்ந்த ஜாதி என்பவர்களுக்கொரு சட்டம், தாழ்ந்த ஜாதி (தீண்டப்படாதவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டவர்கள்) என்பவர்களுக்கு ஒரு சட்டம் என்பதாகவும் இருந்து வருவதையும் அவற்றை நாம் தினமும் அனுபவித்து வருவதையும் மாற்றி எல்லோருக்கும் சமமான நீதி ஏற்படுத்த வேண்டுமானால், நமக்குள்ளாகவே நாம் செய்து கொள்ளும்படியாக எந்த காரியம் செய்தாலும் சரி, எந்தத் தீர்மானம் செய்தாலும் சரி, அவைகளினால் நமது லட்சியத்தை நிறைவேற்ற முடியவில்லை என்பதும், அவைகளுக்குக் கண்டிப்பாய் அரசாங்கத்தின் மூலம் பழய சட்டங்களை மாற்றிப் புதிய சட்டங்களை செய்தே தீரவேண்டும் என்பதும் யாராலும் மறுக்கப்பட முடியாத உண்மைகளாகும். அல்லாமலும், அவைகளில் அநேகவற்றிற்கு சட்டம் செய்யக்கூட நம்மவர்கள் ஏகமனதாய் ஒப்புக்கொள்வதாயிருந்தாலும் கூட முதலில் அரசாங்க அனுமதியையும் பெற வேண்டியதான நிபந்தனைகளும் இருக்கின்றன.

இவ்வொருபுற மிருக்க, அரசாங்கம் எல்லா மக்களுக்கும் பொதுச்சொத்து என்பதையும் அரசாங்க உத்தியோகங்களும் பதவிகளும் எல்லோருக்கும் பொதுச் சொத்து என்பதையும் அதுபோலவே அரசாங்க வரிப்பணமும் எல்லா மக்களுக்கும் பொதுச் சொத்து என்பதையும் யாராவது மறுக்கமுடியுமா? அதுபோலவே அப்பணத்திலிருந்து செலவு செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் எல்லாருக்கும் பொது என்பதையும் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். எனவே அப்பொதுக்காரியங்கள் உரிமைகள் எல்லாருக்கும் சமமாய் அனுபவிக்க சம சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டுமேல்லவா? ஆகலால் இதற்கு நாம் அரசாங்க உதவி எதிர்பார்க்காமலிருக்கமுடியுமா? என்பதை யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்கும் பொது உரிமைகளில் அதிகமான பங்கை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கும் மற்றவர்களை முன்னேறவிடாமல் தடுத்து சூழ்ச்சி செய்து முன்னணியில் இருந்து கொண்டிருப்பவர்களுக்கு மாத்திரம் இக்காரியங்களுக்காக அரசாங்கத்தை எதிர்பார்ப்பது என்பது ஒரு சமயம் தங்களது சுயமரியாதைக்குப் பங்கமாயிருப்பதாகக் காணப்படலாமேயொழிய வெகு குறைந்த உரிமைகளை அனுபவிப்பவர்களுக்கும் வெகு தாழ்ந்த பதவியில் தாழ்த்தப்பட்டிருப்பவர்களுக்கும் தங்கள் பங்குகளைக் கேட்பதும் விடுதலை பெற முயற்சிப்பதும் ஒருக்காலும் அவர்களது சுயமரியாதைத் தத்துவத்திற்கு விரோதமானது என்று எவரும் சொல்ல முடியாதென்றே கூறுவோம்.

ஆதலால் இந்த முறையில் சைமன் கமிஷனிடம் கொடுமைப்படுத்தப் பட்டவர்களும் பிறரால் ஏமாற்றப்பட்டுப் பின்னணியில் தள்ளப்பட்டவர்களும் தங்கள் கஷ்டங்களையும் தேவைகளையும் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்துவது என்கின்ற முறையில் கமிஷனிடம் எடுத்துச்சொல்லுவதிலும் சமசுதந்திரமும் சமசந்தர்ப்பமும் ஏற்படுவதற்கு மார்க்கமில்லாத நேரு திட்டம் என்னும் அரசியல் திட்டத்தை சமசுதந்திரமும் சமசந்தர்ப்பமும் இதுவரை அனுபவிக்காத மக்கள் ஒப்புக்கொள்ளாதிருப்பதிலும் குற்றமொன்றுமில்லை யென்றே சொல்லுவோம். ஆகவே இவை அரசியல் திட்ட விஷயத்தைச் சேர்ந்ததல்லவென்றும் ஒரு சமயம் இவை அரசியல் திட்டங்களைச் சேர்ந்தவைதான் என்று சொல்லப்படுவதானாலும், அவை உண்மையான சுயமரியாதைத் தத்துவத்திற்கு தள்ளப்பட முடியாத அவசியமானது என்றும் சொல்லுவோம்.

பிறகு, மக்கள் பிறவியில் ஜாதிவித்தியாச உயர்வு தாழ்வு கொடுமைகளை ஒழிக்கப்பட வேண்டுமென்பது இந்த இந்நாட்டு மக்களில் பல ஆசாரங்களில் உள்ள எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுவதானாலும் அதற்கு விரோதமாயுள்ள சில விஷயங்களில் உள்ள மடிப்புகளை விட்டுவிட அநேகர் சம்மதியாமல் இருப்பதனால், மற்றொருபுறம் அக்கொடுமைகள் நிலைத்திருக்க மதத்தின் பேரால் மகாநாடுகளும் பிரசாரங்களும் அரசாங்

## திரு. சௌந்திரபாண்டியரின் அவர்கள்

### அக்கிராசனப் பிரசங்கம்.

சென்னை சட்டசபை மெம்பரும், ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவரும், செங்கற்பட்டில் நடைபெற்ற முதலாவது மாகாண சுயமரியாதை மகாநாட்டுத் தலைவருமான திரு. டபிள்யூ. பி. ஏ. சௌந்திர பாண்டிய நாடார் அவர்களின் அக்கிராசனப் பிரசங்கமாவது:—

வரவேற்புக் கழகத் தலைவர் அவர்களே, சகோதரிகளே! சகோதரர்களே!

இன்று இவ்விடம் கூடியுள்ள முதலாவது மாகாண சுயமரியாதை மகாநாட்டுத் தலைமைப் பெரும்பேற்றை யளித்த வரவேற்புக் கழக அங்கத்தினர்களுக்கும், ஏனைய நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இம்மகாநாட்டை நேர்மையுடன் நடத்தி, நம் மக்களை நேரிய நெறியில் புகுத்த என்னுடன் இங்கு கூடியிருக்கும் மகாஜனங்கள் பூரண அன்புடன் ஒத்துழைப்பார்களென்றெண்ணி என் அக்கிராசனப் பிரசங்கத்தை ஆரம்பிக்கின்றேன்.

நம் சிறப்பு

தமிழகத்தில் பூகோள சாஸ்திரம், வான சாஸ்திரம், கணிதம் போன்ற அறிவைப்பெருக்கும் கல்விப் பகுதிகள் தமிழில் தொகுக்கப்படாமல் இல்லை. ஆரியர்களின் மூடப் பழக்க வழக்கங்களைப் புகுத்தி, உயர்வு தாழ்வு கற்பித்து மக்களிடை பிணக்குண்டாக்கும் தன்மையுடன் தற்காலம் உலவித்திரியும் புராண 'இதிகாச' வேத ஆகமங்களை, இடைவழியில் தோன்றிய கபட நூல்களாகவே யான் கொள்வேன். அவை தமிழறிவினின்றும் உற்பத்தியாகவில்லை. ஆரிய தூர்ப்போதனையின் பலனாய்க் கிளம்பிய புஸ்தகக் குப்பைகள் ஆகும்.

தற்கால நிலைமை.

பெருமை படைத்த நம் நாட்டின் தற்கால நிலைமையை ஊன்றிப் பார்த்தால், உண்மைத் தமிழ் மகன் கண்ணீர் உகுக்காமல் இரான். ஆனால் தற்காலச் சீர்கேடான நிலைமையை ஆராய்ந்து காலத்துக் கேற்றவாறு செப்பனிட்டுக் கொள்வதே சிறந்ததாகும். உத்தரத்திலிருந்து இங்கு போந்த ஆரியர்களின் ஆதிக்கம் வலுத்த நாள் முதல் நம் நாட்டிற்குக் கேடு கிட்டியது. நம் சமுதாயம் சிதைக்கப்படலாயிற்று. நாட்டில் சாதிப் பூசல், சமயவேற்றுமை தலை நாட்டியது. உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டது. நான்கு பிரிவுகொண்ட வர்ணாசிரமம் வகுக்கப்பட்டு நாளடைவில் நாலாயிரம் உட்பிரிவுகளாக தொகுக்கப்பட்டது. பூணூல் அணிபவரென்றும், அணியாதவரென்றும் பாகுபாடு தோன்றிற்று. விபூதி தரிப்பவர், நாமமிடுபவரென்ற கூறு வகுக்கப்பட்டது. மக்களை அடிமைக் குழியில் தள்ளும் மூட பழக்க வழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள் மதத்தின் பேரால் உண்டாக்கப்பட்டன. புரோகிதக் கூட்டத்தினருக்கு விசேஷ சலுகை காட்டப்பட்டது. அவர்களுக்கென தனி சுதந்திரமும் பிரத்தியேக அதிகாரமும், கௌரவமும் அளிக்கப்பட்டது. இதனால் மமதை கொண்ட அக் கொள்ளைக் கூட்டத்தினர் தமது ஏமாளித்தனத்தைப் புணர்ந்து நம்மை அடிமைகளாக்கி விட்டனர். ஆரியர் சபைகளிலும் நுழைந்து, அக்கால மன்னர்களை வயப்படுத்தி, தனக்குச் விசேஷ மானியங்களும், தானங்களும் பெற்று, நம்மிடமிருந்து ஜனன [illegible] முதல் இறக்கும் வரை சடங்கின்பேரால் நிதமொரு வரி வசூல் செய்து, நம்மை வறுமைக்குள்ளாக்க ஆரம்பித்தனர். இது காய்ந்த புல்லையும், கிழிந்த பஞ்சாங்கத்தையும், கக்கத்தில் இடுக்கித் திரியும், வேத சாஸ்திரிகளின் கொடுமைகளாகும்.

இது ஒரு புறமிக்க, பிராமணரல்லாதாரின் மனப்பான்மையையும், சற்று சிந்திப்போம். முன்னாளில் ஒரே வகுப்பினராகப் பாவிக்கப்பட்ட நாம் ஆரிய சகவாச தோஷத்தினால் பல சமூகங்களாகச் சிதைக்கப்பட்டு, ஒருவருக்கொருவர் சண்டை பிடித்துக்கலகம் விளைவித்துவருகிறோம். நமக்குள் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பும் நம்பிக்கையுமில்லை. ஒவ்வொரு வகுப்பினருள்ளும் பல் வேறு உட்பிரிவுகள் நுழைந்து பகைமை கொண்டு கொல்லும் சத்துருக்கள் போன்று வாழ்கிறோம். நமக்கு மேலான வகுப்பு ஒன்றும், தாழ்ந்த வகுப்பு ஒன்றும் உண்டு என்கிற கருத்துடையவர்களாகவுமிருக்கிறோம். இதன் காரணமாக நமது சமூகத்திற்கு ஈடு செய்ய முடியா இழிவைத் தேடிக் கொள்கிறோமென்பதை மதக்காப்பாளர்களும், மதத்தின் பேரால் நம்மைக் குறை கூறும் கூட்டத்தினரும் உணர்வதில்லை. க்ஷத்திரியரென்று தம்மை தற்பெருமை கொள்வோர் கொள்க. விஸ்வப்பிராமணர் என்று விளம்புவோர் விளம்புக. வைசியரென்று அழைப்பார் அழைத்துக்கொள்க. இன்னும் எவரெவ்வாறு கூறிக்கொள்ள இஷ்டப்படினும் அவ்வவ்வாறெல்லாம் கூறிக்கொள்க. ஆனால் இவர்களெல்லாம் பார்ப்பனர்களால் ஒரே தன்மையாய்த்தான் பாவிக்கப்படுகிறார்கள். பார்ப்பனர் கண்ணுக்கு எல்லோரும் சூத்திரர்கள்தான். வேசிமக்கள்தான். இதற்கு பார்ப்பனர்கள் மகாநாடுகளின் தீர்மானங்களே போதிய சான்றாகும்.

அடுத்தபடியாக நம்முடன் பிறந்து நம்மைச் சதா அண்டிப் பிழைத்து வரும் ஆதிதிராவிட மக்களின் நிலைமையைக் கவனித்தால், ஆ! ஆ! இன்னுமொரு துக்கசம்பவமாகயிருக்கும். அவர்களுக்குப் பொது ரஸ்தாக்களில் நடக்க சுதந்திரமில்லை. குளங்களில் குளிக்கவும், தண்ணீர் எடுக்கவும் சுதந்திரமில்லை. கலாசாலை சென்று கல்வி பயில அஞ்ஞானம் நீங்க மார்க்கமில்லை. கடவுள் சன் கத்தினிடம் தூதுகளும் நடைபெறுவதையும் பார்க்கும்போது நம்நாடு சுலபத்தில் அக்கொடுமைகளை ஒழிக்கத் தயாராயில்லை என்பதும் உயர்வு தாழ்வுக் கொடுமையின் அஸ்திவாரம் இன்னதென்று பலருக்குப் புலப்படவில்லை என்பதுமே விளங்குகின்றது. அதுபோலவே வர்ணாசிரமப் பிரிவுப்பாகுபாடுகள் விஷயத்திலும் தேசாபிமானி, மகாத்மா, சீர்திருத்தக்காரர், என்பவர்கள் முதல் கொண்டு அவற்றை ஆதரிப்பதும் அதற்கு ஆதாரமான மதம், வேதம் முதலியவற்றைப்பற்றிப் பிரசாரம்செய்வதும் அவற்றிற்கு வேறு வியாக்கியானங்கள் செய்வதுமான நிலையிலேயே இன்னமும் இருப்பதைச் சற்று கூர்ந்து பார்த்தால் இது சம்பந்தமாக மகாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களின் அவசியம் யாவருக்கும் நன்கு விளங்கும். பிறகு, அடுத்தபடியாக,

வகுப்புப் பட்டங்களும் குறிகளும் விடப்படவேண்டும் என்னும் தீர்மானத்தின் அவசியமும் அதுபோலவேதான். எப்படியெனில் மக்களுடைய பெயரைக்கேட்ட மாத்திரத்திலேயே அவர்களது குணம், அறிவு, தன்மை முதலியவைகள் ஒன்றும் தெரியாமலே அவர்களைப் பிரித்து வேற்றுமையாய் நினைக்கத் தகுந்த மாதிரியில் அர்த்தமற்ற பிரிவினைகளைக் காட்டிய வித்தியாசங்கள் ஒழிந்தாலொழிய நமது நாட்டில் மக்கள் ஒன்றுபட்டு ஒரே சமூகமாய் ஒற்றுமையுடன் வாழமுடியாதாகையால் அவ்வித்தியாசங்களைக் காட்டும் பெயர்களும் குறிகளும் ஒழிக்கப்படவேண்டும் என்பது ஒற்றுமையையும் சமத்துவத்தையும் விரும்பும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதேயாகும். மற்ற தீர்மானங்களைப்பற்றிய கருத்துகள், தொடரும்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

வேதப்புரட்டை வெளியாக்கும்

"ஞான சூரியன்" இரண்டாம் பதிப்பு.

வெளிவந்து விட்டது.

முன் விலை ரூபாய் 1. இப்போதைய விலை அணா 0—8—0

ஒரே தடவையில் ஐந்து புத்தகம் வாங்குவோருக்கு

தபால்சார்ஜ் இனாம்.

விலாசம்:— மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு.

ஜாதி என்று சொல்லிக்கொள்ளும் பேர் கோவில்களில் சென்று ஆத்ம சாந்தியடைய மார்க்கமில்லை, பார்ப்பன அக்கிரகாரங்களில் கட்டப்பட்டிருக்கும் பாடசாலை, தபாலாபீஸ்களில் செல்வதற்கு அனுமதியில்லை. அந்தோ அவர்கள் தற்கால பரிதாப நிலைமையை எண்ணும்போதெல்லாம் நம் மனம் உருகுகிறது. கண்ணீர் கலங்குகிறது; ஆவி துடிக்கின்றது. நமது நாட்டிற்கு விடுதலை நாள் அண்மையில் இல்லையென்ற அச்சம் எழுகின்றது. சுருக்கங் கூறின், நாம் தங்களை மேலான ஜாதியெனச் சொல்லிக்கொள்ளும் ஒரு கூட்டத்திற்கு சமுதாய அடிமைகளாகவும் ஆங்கிலேயருக்கு அரசியல் அடிமைகளாகவுமிருக்கின்றோம். அரசியல் அடிமைப் பிணி நம்மை ஒருபுறம் வாட்டுகிறது. சமூக விலங்கு நம்மை மறுபுறம் இறுக்குகின்றது. இவை இரண்டிலும் சமூக விலங்கை வேரறுக்க வேண்டியதே முதல் முதலாக நம்முடைய முக்கிய கடமையென நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### நமது இயக்கம்

மேற்கண்ட குறைபாடுகளைக் களைவதற்குப் பற்பல காலங்களில் பற்பல இயக்கங்கள் தோன்றின. அவற்றுள் பழைய காங்கிரஸ் இயக்கமும் ஒன்றாய் விளங்கியது. சமுதாய சீர்திருத்தத்தில் ஆவல் கொண்ட தலைவர்கள் பலர் காங்கிரஸ் இயக்கத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த காலங்களில் அவ்வியக்கம் ஓர் பெரும் சமுதாயச் சீர்திருத்தச் சங்கமாய் மிளிர்ந்தது, ஆனால் நாளடைவில் அவ்வியக்கத்தில் சுயநலமிகளுக்குச் செல்வாக்கு ஏற்பட்டது, சமுதாயக்கொள்கைகளுக்கு ஆதரவு குறைந்தது. இந்த நிலைமையில் நல்ல காலமாக டாக்டர் நாயர் பெருமான் சர் பி. தியாகராயர் ஆகிய பெரும் மேதாவிகளால் தற்போதைய பிராமணரல்லாதாரியக்கம் ஆரம்பிக்கப்பட்டு ராஜீய கொள்கைகளில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்க முக்கியமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கையாண்டு சமுதாயச் சீர்திருத்தங்கள் செய்து வந்தது. இவ்வாறு சமதர்மக் கடன் ஆற்ற ஆரம்பிக்கப்பட்ட பார்ப்பனரல்லதார் இயக்கம் மெதுவாக முன்னேற்றமடைந்து வருங்கால் அவ்வியக்கத்திற்கு நிகரான ஒரு நற்காலம் கிட்டியது, மக்களிடை பெருஞ்செல்வாக்குப் பெற ஒரு நற்சந்தர்ப்பம் வாய்த்தது. அச்சந்தர்ப்பமெது? அதுதான் தற்பொழுது தமிழ் நாட்டில் வீரகர்ச்சனை புரிந்து வரும் சுயமரியாதை இயக்க ஆரம்பமாகும். மக்களுக்கு நலன் பல விளைந்து வருவதான நமது மாபெருந்தலைவர் உயர்திரு ஈ. வெ. ராமசாமி அவர்களால் சுயமரியாதை இயக்கம் மக்களிடை பரவ ஆரம்பித்த புண்ணிய தினத்தையே யான் இங்கு குறிக்கின்றேன். சகோதரசகோதரிகளே! நமது தலைவர் திரு நாயக்கரவர்கள் அனுபோகசாலி, ஆராய்ச்சியாளர், அவர் நாட்டிலுள்ள மக்களின் குணங்கள் யாவற்றையும் நீர உணர்ந்துள்ளார். இவ்விதப் பெரியார் ஆரம்பிக்கப்பட்ட நமது இயக்கத்தின் சிறப்பை அதிகம் விரித்து தற்பெருமை கொள்ள நான் விரும்பவில்லை. அநேக வருஷங்களாக நம்மிடையே வசித்து வருகிற நமது புனித இயக்கமானது மக்களின் போதரவை எவ்வளவு தூரம் பெற்றிருக்கிறது என்று யோசித்துப் பார்க்குமிடத்து நமது இயக்கத்தை புத்தபிரானால் ஆரம்பிக்கப்பட்ட புண்ணிய இயக்கத்துக்கும் கிறிஸ்து நாதரால் நாட்டப்பட்ட கண்ணிய இயக்கத்துக்கும் மார்ட்டின் லூதரால் ஆரம்பிக்கப்பட்ட மாண்புமிக்க இயக்கத்துக்கும் மேலானதாகவே கூறலாம். இத்துணைப் பெருமைவாய்ந்த இயக்கத்தால் ஜாதி வேற்றுமையில்லை, சமய வேற்றுமை கிடையாது, இது போன்ற பிற வேற்றுமைகளும் இல்லை. பொது ஸ்தாபனங்கள் எல்லாவற்றிலும் எல்லோருக்கும் சம உரிமை உண்டு, மனு அநீத நூலின் கொள்கைகளுக்கு கொஞ்சமும் இடமில்லை. சமூக விடுதலையின்றி அரசியல் விடுதலை இல்லை என நான் இந்திய மக்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்துகிறேன். அவைகளுக்குச் சில உதாரணங்களும் தருகின்றேன். சமூக விடுதலைக்கு முன் அரசியல் சுதந்திரத்தை இச்சிக்கும் நண்பர்கள் சற்று ஊன்றி நோக்குவார்களாக. மனிதனை மனிதன் அடிமைப்படுத்தி கொடுமைபுரிந்து வந்த எந்த நாடும் விர்த்தியடைந்ததில்லை.

தொடரும்.

(9ம் பக்கத் தொடர்ச்சி,)

மான நூல்களையும், கதைகளையும், நாடகங்களையும் எழுதவோ, நடிக்கவோ, ஆதரிக்கவோ கூடாதென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது"

### சிற்றுண்டிச் சாலைகளில் ஜாதி வித்தியாசம்

(அ) "வகுப்புபேதம் காண்பிக்கப்படுகிற எல்லா ஹோட்டல்களையும் காப்பிக்கிளப்புகளையும் இந்த மகாநாடு கண்டிப்பதுடன், இவ்வித விஷமத்தனமான பேதங்களுள்ள ஹோட்டல்களுக்கும் காப்பிகிளப்புகளுக்கும் அவ்வவ்விடத்திலுள்ள அதிகாரிகள் லைசென்ஸ் கொடுக்கக் கூடாதென்றும் கேட்டுக்கொள்கிறது. (ஆ) ரயில்வே அதிகாரிகள் தங்கள் வசத்திலும் மேற்பார்வையிலுமுள்ள சாப்பாட்டுச் சாலைகளிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும், ஜாதி, மதம், வகுப்பு, நிறம் முதலியவற்றைப் பொருத்து எவ்வகையிலும் வேற்றுமையாகப் பிரயாணிகளைப் பாராட்டாமலிருப்பதற்குறிய நடவடிக்கைகளை உடனே கைக்கொள்ளுமாறும், இவ்விழிவான வேற்றுமையை ஒழிக்க ரயில்வே ஆலோசனைக் கமிட்டியினர்களும் இந்திய சட்டசபை மெம்பர்களும் ஏற்பாடுகள் செய்யுமாறும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது".

"தஞ்சை ஜில்லா போர்டார் சித்த வைத்தியத்தை ஆதரிக்க வேண்டியது என்றும், பரம்பரை சித்த வைத்தியர்களைத் தாலூகா, ஜில்லா போர்டுகளில் நியமிக்க வேண்டுமென்றும் ஸ்தல அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது."

"நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்குத் தொழிலாளர்களுடைய முன்னேற்றமும் அவசியமானபடியால் அவர்களின் வேலைக்குத் தகுந்தபடியும் அவர்கள் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய அளவு கூலி கொடுப்பதோடு ஒவ்வொரு தொழிலிலும் கிடைக்கும் லாபத்தில் அந்தந்த தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான பங்கு கொடுக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது".

### தொழிலாளர் குறைகள்

"தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் அரசாங்கத்தார் நடுநிலைமை வகிக்காததற்காக அவர்களை கண்டிப்பதுடன், அநியாயமாய்த் துன்பப்பட நேர்ந்த தொழிலாளர்களிடம் இம்மகாநாடு அனுதாபம் காட்டுகிறது"

"இளைஞர்களுக்கு தேகப்பயிற்சிக்குரிய சாதனங்கள் அளிப்பது அவசியமென இம்மகாநாடு கருதுகின்றது"

"சுயமரியாதை இயக்கத்தைப் பரவச் செய்யவும், அதன் லட்சியங்களையடைவதற்குரிய பிரசாரம் புரியவும் நிலை பெற்ற ஒரு கமிட்டியும் அக்கமிட்டியின் கீழ்ப் பிரசாரத் தொண்டர்களும், இதற்கு வேண்டிய பொருளும் அமைக்கப்படுவது அத்யாவசியமென இம்மகாநாடு கருதுவதுடன், சுயமரியாதை இயக்கத்தின், கொள்கைகளையும் லட்சியங்களையும் கொள்பவர்களையே சட்டசபைகள், ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவற்றிற்கு தேர்ந்தெடுத்து அனுப்புவதற்குச் சுயமரியாதைத் தொண்டர் உதவி செய்யும்படி இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது".

### காரியக் கமிட்டி தேர்தல்.

பிறகு திரு. எஸ். ராமநாதன் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைக் குறித்தும் அதன் சம்பந்தமான காரியக் கமிட்டித் அமைப்புத் திட்டம் சம்பந்தமாகவும் விளக்கிப் பேசியபின் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் அவர்கள் வருடாந்த மகாநாட்டுத் தலைவர் அவர்களே ஒவ்வோராண்டும் அவ்வியக்கத் தலைவர்களாயிருப்பார்களென்றும் எடுத்துக் கூறி. கீழ்க்கண்டவர்கள் காரியக் கமிட்டி மெம்பர்களாக இருக்கவேண்டுமெனப் பிரேரேபித்தார். திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி, எ. டி. பன்னீர்செல்வம், (உப தலைவர்கள்) எஸ். ராமநாதன், காரியதரிசி, திரு ஷண்முகம் செட்டியார், (பொருளாளர்கள்) கமிட்டி மெம்பர்கள் ஆர். கே. ஷண்முகம், சி. பி. சாயாரோகணம், எம். கே. சாமி, ஜே. எஸ். கண்ணப்பர், சிவராஜ், திருச்சி விஸ்வநாதம், பிச்சப்பா, சின்னையா, சுரேந்திரநாத், ஆரியா, கனகசபை சி. என். ரத்தின சபாபதி.

### மற்ற தீர்மானங்கள்

"சமூக முன்னேற்றத்திற்கும் சமூக விடுதலைக்கும் சுயமரியாதை இயக்கக் கர்த்தாவாகிய திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியார் அவர்கள் ஆற்றியுள்ள பெரும்பணிக்கு நன்றி பாராட்டுவதுடன், அவர்கள் இவ்வியக்கத்துக்குத் தலைமை வகித்து நடத்துவதில் அவர்கள் பால் தங்களுக்கு பூரண நம்பிக்கையுண்டென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது."

## ஓர் விஞ்ஞாபனம்.

செங்கற்பட்டில் நடைபெற்ற முதலாவது மாகாண சுயமரியாதை மகாநாட்டின் தீர்மானப்படி, பெயர்களின் பின்னால் சேர்க்கப்படும் நாயக்கர், அய்யர், செட்டியார், முதலியார் போன்ற ஜாதிப்பட்டப் பெயர்களையும், நாமம், விபூதி பூணூல் முதலிய மதச்சின்னங்களையும் நீக்கிவிட்டவர்களின் ஜாபிதாவையும் இனி "குடி அரசு" பத்திரிகையில் வெளியிட உத்தேசித்திருப்பதால் ஜாதிப்பட்டங்களை நீக்கிவிட்டவர்களும் மதக்குறியை விட்டவர்களும், தம் தம் விலாசத்தோடு அவ்வப்போது தெரியப்படுத்தினால் பிரசுரிப்பதற்கு மிகவும் உபகாரமாயிருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிற்க இனி எமக்கு எழுதும் கடிதங்களிலும் எமது பெயரைக் குறிப்பிடும் சமயங்களிலும் எமது பெயருக்குப்பின்னால் நாயக்கரென்று குறிப்பிடாமல இருக்கவேண்டுகின்றோம். (ப-ர்)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

### தலைவர் உபன்யாசம்.

தலைவர் தமது தலைமைப் பிரசங்கத்தை படித்தார். தலைவர் சொற்பொழிவை மற்றோர் பக்கம் பார்க்க.

### விஷயாலோசனைக் கூட்டம்,

இரவு சாப்பாட்டிற்கு மேல் விஷயாலோசனை சபை கூட்டப்படுவதாய்ச் சொல்லி மகாநாடு அடுத்த நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### மறுநாள் காலை.

மறுநாள் காலையில் மகாநாடு கூடி சுமார் பத்து தீர்மானங்கள் வரை நிறைவேற்றப்பட்டு பகல் சாப்பாட்டிற்கு மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

### பகல் சாப்பாட்டிற்கு பிறகு வாலிபர் மகாநாடு.

திரு ஆரியா அவர்கள் திரு பன்னீர் செல்வம் அவர்களை பிரேரேபிக்க திரு. ராமசாமி ஆமோதிக்க திரு செல்வம் அவர்கள் தலைமையில் வாலிப மகாநாடு துவக்கப்பட்டது. திரு செல்வம் அவர்கள் அக்கிராசன முகவுரைக்குப்பின் திருவாளர்கள் ஆரியா ஆர். சொக்கலிங்கம் எஸ், ராமநாதன் தண்டபாணி கண்ணப்பர் தாவூத்ஷா சுயம்பு சாமி சகஜானந்தர் பண்டிட் ஆனந்தம் முதலியவர்கள் பேசியபிறகு திரு. ராமசாமியால் சென்னை மாகாண பள்ளி மாணவர்களும் மற்ற வாலிபர்களும் பள்ளிக்கூடங்களில் விடப்படும் வேனிற்கால ஓய்வு நாள்களில் தமிழ் நாடு முழுவதும் கிராமம் கிராமமாய்ச் சுற்றி சுயமரியாதைப் பிரசாரம் செய்யவேண்டுமென்றும் இந்தப் பிரசாரத்திற்கு பனகால் சுயமரியாதை பிரசாரம் என்கின்ற பெயர் கொடுத்திருக்கிறதென்றும் பிரேரேபித்தார். அது திரு ஆரியா அவர்களால் ஆமோதிக்கப்பட்டு வாலிபர்களால் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. நான்குநேரி திரு எஸ் முத்தைய்யா அவர்களும் தஞ்சை திருவாளர் கோவிந்தசாமியும் இன்னும் சில வாலிபர்களும் பிரசாரத்திற்கு வருவதாக அந்தக் கூட்டத்திலேயே தங்கள் பெயர்களைக் கொடுத்தார்கள். பிறகு திரு ஈ. வெ. ராமசாமி, மதுரை பார்ப்பனரல்லாத மகாநாட்டில் சமையல் பொறுப்பை ஒப்புக் கொண்டு வெகு திருப்திகரமாக சாப்பாடு செய்து போட்ட திரு கருப்பையா அவர்களுக்கு ஒரு தங்கச் சங்கிலியும் தங்கப் பதக்கமும் அளித்தார் திரு செல்வம் அவர்களின் முடிவுரை ஆனவுடன்

### மகாநாடு,

தலைவர் திரு சவுந்திரபாண்டியர் தலைமையில் சுயமரியாதை மகாநாடு நடவடிக்கைகள் துவக்கப்பட்டு சுமார் 10 தீர்மானங்கள் வரை நிறைவேற்றப்பட்டன. மகாநாட்டு தீர்மானங்கள் நிறைவேறும் போது மூடப் பழக்க வழக்கங்களைப் பற்றி சுமார் ஏழு வயதுள்ள திருவண்ணாமலை திரு லலிதா என்கின்ற பெண் வெகு அருமையாகப் பேசி தீர்மானத்தை ஆதரித்தது குறிப்பிடத் தக்கது.

### அசித்த மகாநாடு

தீர்மானங்களெல்லாம் நிறைவேறியவுடன் திரு ஈரோடு ஈ வெ கிருஷ்ணசாமி (திரு ஈ வெ. ராமசாமியின் அண்ணன்) அவர்கள் அடுத்த மகாநாட்டை ஈரோட்டிற்கு அழைத்தார். எல்லாஜனங்களாலும் பெருத்த ஆரவாரத்தோடு ஒப்புக் கொள்ளப்பட்டது பிறகு தலைவர் தமது அழகான முடிவுரை நிகழ்த்துகையில், மகாநாட்டு தீர்மானங்களை காரியத்தில் நடத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வது தான் தமது முடிவுரை என்றும் அதற்கு பெருத்த உறுதியும் முயற்சியும் வேண்டுமென்றும் இவை நிறைவேறப்படாவிடில் இந்நாட்டு மக்கள் தங்களை மற்ற மக்களுக்கு சமமாய்ச்சொல்லிக் கொள்ள முடியாதென்றும் தமக்கு அதிகமான பொறுப்பு ஏற்பட்டிருப்பதை தாம் உணருவதாகவும் தன்னால் கூடியதை எல்லாம் இவ்வியக்கத்திற்கே செலவழிக்க சற்றும் பின் வாங்கப் போவதில்லை என்றும் கூறி முடித்தார்:-

### வந்தனோபசாரம்.

பிறகு திரு வ. ராமசாமி மகாநாடு கூட்டியவர்களுக்கு வந்தனம் செலுத்தினர். திரு பி, டி. ராஜன் எழுந்து தாமும் திரு ராமசாமியும் கேட்டுக் கொண்டதற்கிணங்க உண்டி வசூலில் சுமார் 3000 ரூ வரை வசூல் ஆனதற்கு உண்டிப்பெட்டி எடுத்துச் சென்றவர்களுக்கும் பணம் போட்டவர்களுக்கும் வந்தனம் செலுத்தினர் பிறகு ஈ வெ. ராமசாமி வந்திருந்தவர்களுக்கும் குறிப்பாக பெண்களுக்கும் மகாநாடு நடத்த முயற்சி எடுத்து இவ்வளவு பெருமையாக நடத்தினவர்களுக்கும் குறிப்பாக திருவாளர்கள் ஜமீன்தார் அப்பாசாமி வள்ளலாருக்கும் வேதாசலத்திற்கும் ராவ் பகதூர் கிருஷ்ணசாமிக்கும் கண்ணப்பருக்கும் நன்றி செலுத்தியதோடு தன் கூடவே இருந்து தன் இஷ்டப்படியெல்லாம் நடந்து தனது தொண்டிற்கும் மிகுதியும் உதவி அளிக்கும் தமது வாழ்க்கைத்துணை திருமதி நாகம்மைக்கும் நன்றியறிதலைச் செலுத்தி தீர்மானங்களின் தத்துவங்களைப் பற்றியும் சிறிது விளக்கி விட்டு மற்ற விஷயங்களைப்பற்றி இரவு சாப்பாட்டிற்கு மேல் இதே பந்தலில் விளக்குவதாக சொல்லி அநேக கனவான்களுக்கு மாலையிட்டபின் மகாநாடு கலைந்தது. அன்று இரவு மகாநாட்டிற்கு வந்த பிரமுகர்களுக்கு திரு அப்பாசாமி வள்ளலார் வீட்டில் ஒரு பெரிய விருந்து நடந்தது.

### இரவு 10 மணிக்கு மேல் போதுக்கூட்டம்

இரவு சாப்பாடு நடந்தபின் மகாநாட்டுப் பந்தல் நிறைய சுமார் 4000 பேர்கள் வரை 10 மணிக்கே வந்து கூடிவிட்டார்கள். மகாநாட்டில் இருந்த பெண்களை விட அதிகமான பெண்கள் வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு தஞ்சை திரு ஐ குமாரசாமியாரை தலைமை வகிக்கும்படி திரு ஈ வெ ராமசாமி வேண்ட திரு சௌந்திரபாண்டியர் ஆமோதிக்க திரு குமாரசாமியார் அக்கிராசனம் வகித்துக் திரு ராமசாமியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லி ராமசாமியைப் பேசும்படி கட்டளையிட மகாநாட்டில் நடந்த தீர்மானங்களைப்பற்றி திரு ராமசாமி திருச்செ. முருகப்பா, அப்பாசாமி, தண்டபாணி, பொன்னம்பலனர், லிங்கம், அழகிரிசாமி முதலிய கனவான்கள் இரவு 10 மணி முதல் விடியற் காலம் 5 மணி வரை பேசினர்கள்.

---

### கோ, லெட்சுமி புரம் சோக்கலிங்க வித்தியாசாலை. இரண்டாவது ஆண்டு விழா,

ஷை வித்தியாசாலையின் இரண்டாவதாண்டு விழா நிகழும் விபவ ஆண்டு மாசித்திங்கள் 17 ம் நாள் (28 2 29) வியாழக்கிழமை காலை 9 மணி முதல் தேவகோட்டை டிப்டி கலெக்டரும், காரைக்குடி முனிசிபல் தலைவரும் ஆகிய திருவாளர், சி. திருவேங்கட முதலியார் பி. ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். அன்பர்கள் வரவை விரும்புகிறோம்.

ந. சொ. அருணாசலன்.

---

### கோ, லெட்சுமிபுரம், ஸ்ரீ மீனாட்சி சங்கம். மூன்றாவதாண்டு விழா,

ஸ்ரீ மீனாட்சி சங்கத்தின் மூன்றாவதாண்டு நிறைவுவிழா நிகழும் விபவ ஆண்டு மாசித்திங்கள் 17 ம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் தேவகோட்டை டிப்டி கலெக்டரும், காரைக்குடி முனிசிபல் தலைவரும் ஆகிய திருவாளர், சி. திருவேங்கட முதலியார் பி. ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். அன்பர்கள் வரவை விரும்புகிறோம்.

ஸ்ரீ மீனாட்சி சங்கத்தார்.

---

### மதுரை ஜில்லா கள்ளர் குல இரண்டாம் மகாநாடு.

இம்மகாநாடு சோழவந்தானில், நாளது விபவ ஹூ மாசி மீ 20 தேதி (3—3—29) ஞாயிற்றுக்கிழமையன்று திரிசிரபுரம் பிஷப் ஹீபர் காலேஜ் தலைமைத் தமிழ்ப்போதகாசிரியர் திருவாளர் ந. மு வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும். குலாபிமானிகள் யாவரும் தவறாது விஜயஞ் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

காரியதரிசிகள்.

---

இனும்! இனும்!! இனும்!!!

சாலியர் மகாஜன சங்கம் க்ஷேமநிதித் தருமப்பண்டு லாட்டரி.

சீட்டு 1க்கு ரூ. 1 வீதம் 11000 சீட்டுக்கள்.

22 சீட்டுள்ள புக் 1க்கு ரூ. 20.

முதல் பிரைஸ் ரூ. 1000.

பிரைஸ் எடுக்கும் தேதி சுக்கில ஹூ வைகாசி மீ 24உ (6—6—29)ல் நடைபெறவைக்கப் பெற்றிருக்கிறது. ஷை தேதியில் கண்டிப்பாய் பிரைஸ் எடுக்கப்படும். சீட்டு புத்தகம் விற்பவர்களுக்கு தக்க கமிஷனுடன் தனிப் பிரைஸ்களும் இருப்பதால் தேவையான புத்தகங்களுக்கு முன்னால் உடனே அனுப்புவீராக.

உ. அ சுந்தரமகாலிங்கம்,
K. P. K. சுப்பிரமணியம்,
காரியதரிசிகள்,
சாலியர் மகாஜன சங்கம்
க்ஷேமநிதி லாட்டரிக்கமிட்டி
அருப்புக்கோட்டை,
ராமநாதபுரம் ஜில்லா.

# இம் ௴ 2௳ நடைபெற்ற திருநெல்வேலி ஜில்லா கிறிஸ்தவ சாம்பவர் மகாநாடு.

## தீர்மானங்கள்

மகாராஜா சக்ரவர்த்திகளுக்கு கூடிய சீக்கிரத்தில் பூரண சுகத்தையும் நீடிய ஆயுளையும் கொடுக்கும்படி இறைவனை வேண்டுகிறது.

மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு சாம்பவகுல மக்களின் ராஜபக்தியை மிக பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறது.

சைமன் கமிஷனை சென்னை மாகாணத்திற்கு இம்மாநாடு வரவேற்கிறது.

தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றத்திற்காக உழைக்கும் பல தலைவர்களுக்கும் இம்மகாநாடு நன்றி கூறுகிறது.

எங்கள் குலத்தவர்கள் மத்தியில் கட்டாயக்கல்வி ஏற்படுத்தும்படிக்கும் கிறிஸ்தவ சாம்பவர்களின் இதரகிறிஸ்தவர்களுக்குள் குடிகொண்டிருக்கும் ஜாதி வித்தியாசத்தினால் மிகவும் பிற்பட்டமாக இருப்பதினால் இந்து ஆதி திராவிடருக்கு கவர்ன்மெண்டார் செய்து வரும் சகல உரிமைகளையும் கிறிஸ்தவ சாம்பவர்களுக்கு கொடுத்து காப்பாற்றும்படி இம்மகாநாடு தாழ்மையாய் வேண்டுகிறது.

சாம்பவ குலத்தவரில் 'கிறிஸ்தவர்கள்' 'இந்துக்கள்' என்ற பேதங்களை உண்டுபண்ணி சமூக ஒற்றுமையைக் கெடுத்துக் கொண்டு திரிகிற தலைவர்களை இம்மகாநாடு பலமாய்க் கண்டிக்கிறது.

ஸ்தல ஸ்தாபனங்களில் சில இடங்களை கிறிஸ்தவ சாம்பவர்களுக்கென்று ஒதுக்கி வைத்து அவைகளை கிறிஸ்தவ சாம்பவர்களாலேயே தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களை நியமிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யகவர்ன்மெண்டாரையும் சைமன் கமிஷனையும் இம்மகாநாடு பணிவுடன் வேண்டுகிறது.

சென்னை லேபர் கமிஷனருக்கு பெர்சனல் அஸிஸ்டெண்டாக ஆதிதிராவிட குலத்தவர்களான திருவாளர் ராமச்சந்திரன் பி.எ. அவர்களை நியமித்ததற்காக காருண்ய கவர்ன்மெண்டாருக்கு இம்மகாநாடு நன்றியறிதலை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறது.

ஆதிதிராவிடர்களில் மதபேத மின்றி குல முன்னேற்றத்திற்காக உழைக்கிற சென்னை ஆதி திராவிட மகாஜன சபையின் தலைவர் திருவாளர் ராவ்சாகிப் எம். சி. மதுரைப்பிள்ளையவர்களுக்கும் இம்மகாநாடு நன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறது.

இறந்துபோன பிராணிகளின் மாமிசத்தை புசிப்பவர்கள் தண்டனையடைவார்கள் என்று இருக்கிற சட்டத்தை பாமர ஜனங்களுக்கு பகிரங்கமாய் தெரியப்படுத்தும்படிக்கான முயற்சிகள் செய்ய கவர்ன்மெண்டாரை இம்மகாநாடு வேண்டுகிறது.

பாதிச்சம்பளம் வாங்கும்படி சர்க்கார் விதி ஏற்பட்டிருந்தும் சில பள்ளிக்கூடங்களில் கிறிஸ்தவ ஆதிதிராவிடர்களுக்கு பூரா சம்பளம் கேட்டு நிர்ப்பந்திப்பதை ஜில்லா எடுகேஷனல் ஆபீசரவர்கள் கவனித்து பாதிச் சம்பளம் வாங்கும்படி ஏற்பாடு செய்ய இம்மகாநாடு தாழ்மையாய் வேண்டுகிறது.

ஸ்ரீ திருப்புளியங்குடி ஆதி திராவிடர் தெருவிற்கு போகிற வழியில் கால்வாயில் ஒரு பாலம்கட்ட ஏற்பாடு செய்யும்படி சென்னை கமிஷனர் அவர்களை இம்மகாநாடு வேண்டுகிறது.

சாம்பவர்களின் முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற சாம்பவசமூக சேவக சமாஜத்தில் சகல சாம்பவகிராமங்களும் அங்கங்களாகும்படி இம்மகாநாடு வேண்டுகிறது.

திருநெல்வேலி ஜில்லா ரெவின்யு டிபார்ட்மெண்டில் வேலை செய்துவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்களுடைய நிலைமையை நன்றாய்க் கவனித்து அவர்களுக்கு பிரமோஷன் முதலியவைகள் கொடுத்து உற்சாகப் படுத்தும்படி திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் துரை அவர்களை இம்மகாநாடு பணிவுடன் வேண்டுகிறது.

ரெஜிஸ்டரேஷன் டிப்பார்ட்டு மெண்டில் பன்னிருவருக்கு இருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பில் எடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் பிறப்பித்திருக்கிற சட்டத்திற்காக இம்மகாநாடு கவர்ன்மெண்டாருக்கு நன்றியறிவு கூறுவதோடு, கவர்ன்மெண்டு ஒவ்வொரு இலாக்காவிலும் இப்போல்பட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறது.

"கிறிஸ்தவ ஆதிதிராவிடர்" ஹிந்து ஆதித்திராவிடர் என்ற பேதங்காட்டாமல் ஆதிதிராவிடர்களிலிருந்து ஒரு நபரை லெஜிஸ்லேட்டிவ் கவுன்ஸில் மெம்பராக எடுக்கும்படி இம்மகாநாடு கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொள்ளுகிறது.

சாம்பவர்களின் கல்வி விர்த்தி செய்ய ஓர் டவர்தா பள்ளிக்கூடத்தை ஏற்படுத்த தீவிர முயற்சிகள் எடுக்க திருநெல்வேலி ஹார்மிஷன் அதிகாரிகளை இம்மகாநாடு வேண்டுகிறது.

கிறிஸ்து மார்க்கத்திலுள்ள மற்ற ஜாதி சபைகளுக்குள் சாம்பவ கிறிஸ்தவர்கள் உபாத்தியாயர்களாகவோ உபதேசிகளாகவோ குருவாகவோ இருக்கும்படி மற்றவர்கள் இடங்கொடுக்கிறதில்லை யாகையினால் சாம்பவ குலத்தவர்களையே சாம்பவ சபைகளை நடத்தும்படி ஏற்பாடுசெய்ய எல்லா ஐரோப்பியமிஷனரிமாரையும் வேண்டுகிறது.

திருநெல்வேலி ஜில்லாவில் கிறிஸ்து மார்க்கம் ஸ்தாபனமாகி இவ்வளவு காலமாகியும் கிறிஸ்தவர்களுக்குள் நிலைத்துவரும் ஜாதி வித்தியாசத்தின் மூலமாய் சாம்பவ கிறிஸ்தவர்கள் பழைய நிலையிலேயே இருக்கிறதினால் திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்தில் நடந்துவரும் "சுப ஆதரவு" என்ற சட்டத்தை சாம்பவ கிறிஸ்தவர்களுக்குள் உபயோகிக்கவும் 2, 3 தனி ஐரோப்பிய மிஷனரிமாரை எங்களுக்காக ஏற்படுத்தவும், கிறிஸ்து மார்க்கத்தினால் முன்னேற்றமடைந்திருக்கும் மற்ற ஜாதிகளைப்போல நாங்கள் முன்னிலைக்கு வருமளவும் தாய்க்கமிட்டியாரே எங்களை பராமரிக்கும்படி இம்மகாநாடு வேண்டுகிறது.

ஆதி திராவிடர்களுக்கென்று மிஷனில் ஒதுக்கிவைத்திருக்கும் ஸ்காலர்ஷிப் முதலிய உதவிகளை ஓர் ஐரோப்பிய குருவின் தலைமைக்குள்பட்ட 6 ஆதி திராவிடர்கள் அடங்கிய ஓர் கமிட்டியார் கையில் கொடுத்து நடத்தும்படி திருநெல்வேலி அத்தியக்ஷாவர்களை இம்மகாநாடு வேண்டுகிறது.

புதிதாய் வரப்போகிற திருநெல்வேலி அத்தியக்ஷாவர்களை பேட்டி கண்டு சாம்பவ கிறிஸ்தவர்களின் குறைகளை எடுத்துச்சொல்லும்படி சாம்பவ கிறிஸ்தவர்கள் அடங்கிய ஓர் கமிட்டி ஏற்படுத்தும்படி தீர்மானிக்கிறது.

கூட்டத்தின் தீர்மானங்களை மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கும்படி உபாத்தியாயர் A. தேவசகாயம் அவர்களுக்கு இம்மகாநாடு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

---

## தெம்மாப்பட்டு மகாஜனங்களுக்கு ஓர் வேண்டுகோள்.

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் சேர்ந்த தெம்மாப்பட்டு என்பது சுமார் ஆயிரத்தைந்நூறு வீடுகள்கொண்ட ஓர் கிராமமாகும். இங்கு பற்பல சமூகத்தார்கள் உளர். ஆயினும் கிராமஒற்றுமை சமூகஒற்றுமை குன்றிப்பலருடங்களாயின. குறைபாட்டைத்திருத்தியமைக்கத் தக்கபல பெருமக்களிருந்தும் சுயநலவேட்கையின் மிகுதியால் வாளாவிருக்கின்றனர். இவ்வளவு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பிற்கால ஒற்றுமைச் சின்னமான இவ்வூர் இளஞர்கள் ஒன்று சேர்ந்து நமது மாபெருந்தலைவர் திருமிகு ஈ. வெ. இராமசாமி வள்ளலின் சிறப்புப் பெயரால், வைக்கம் வீரர் வாசகசாலை என்று நாமிட்டு காரைக்குடி 'குமரன்' ஆசிரியர் திருமிகு. சொ. முருகப்பா அவர்களால் திரு. ஜீவானந்தர் அவர்களால் பெருந்த தலைமையின் கீழே 1-2-29ல் ஓர் வாசகசாலை திறப்புவிழா சிறப்புற நடந்திருப்பதைபார்க்கும்போது மேலேகண்டவாறு மதியால இவ்வூரின் ஒற்றுமைவாழ்வுக்கு சுயமரியாதைவாழ்வுக்கு அஸ்திவாரம் நாட்டியாயிற்றென்றே சொல்லலாம். பல வாசகசாலை எதிர்ப்புகளுக்கிடையே வெற்றியுடன் திறந்துவைத்துவிட்டோமென்று இருமாந்திருக்காமல், தற்காலம் சுயமரியாதைக் கொள்கையில் ஈடுபட்டிருக்கும் சகோதரர்களும் ஈடுபடாது யாருக்கோ வந்த விருந்தென்று விலகிநிற்கும் பெரியோர்களும், சுடலுக்கப்புறமுள்ள இவ்வூர்வாசிகளான எனதருமை அன்பர்களும் "ஆரியக் கூத்தாடினும் காரியத்திற்கண் இருக்கவேண்டும்" என்ற நம முன்னோர் பொன்மொழிக்கிணங்க காலச்சக்கரத்தின் போக்கை நன்குணர்ந்து ஜாதிமதமென்னும் திமிர்விலங்கை சுயமரியாதையென்னும் கூர்வாள் கொண்டறுத்தெறிந்து நமதியக்கத்துக்கு வேண்டிய பொருளுதவி சரீர உதவிசெய்து கூடியவிரைவில், தென்மாபதிச் சமரச சுயமரியாதை இளைஞர் சங்கமொன்று தோற்றுவித்து தக்கவர்களைக்கொண்டு திறப்புவிழா ஆற்றி அதன்மூலம் நாட்டுக்கு நல்லூழியஞ் செய்து வருவீர்களென்று இறைஞ்சுகின்றேன்.

எ. முத்துராமன், கலயம்புத்தூர், பழனி.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியோர்களைப்பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் சில வார்த்தைகள் சொல்லுவது மிகையாகாதெனக் கருதுகின்றேன்.

இந்த மகாநாட்டைக்கண்டவுடன் நமது நாட்டின் சீர்திருத்தக்காரருள் தலை சிறந்து விளங்கிய சுவாமி ஈஸ்வரானந்தர் என்னும் பெருந்தகையாரின் அருமையான சமுதாய சீர்திருத்த வேலைகள் எனது ஞாபகத்திற்கு வருகின்றன.

அதாவது இப்போது இந்த சுயமரியாதை இயக்கம் என்ன என்ன வேலைகளைச் செய்து வருகின்றதோ அந்த வேலைகளையே தான் அப்பெருந்தகையாரும் செய்து வந்தார். அப்பேர்ப்பட்ட அருமையான ஒரு பெரியார் நம்மை விட்டு மறைந்து இன்றைக்கு சரியாக ஒரு வருஷம் தான் ஆகின்றது. ஆதலால் அவருடைய பெயரை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகத்திற்குக் கொண்டு வர வேண்டியது அவசியமெனக் கருதுகின்றேன். அப்பெரியாரின் தூய வாழ்க்கையிலும் அருமையான சமூக வேலைகளிலும் ஒப்புயர்வற்ற ஒழுக்கத்திலும் எனக்கு நேராகவே அதிகமான பக்தியும் மரியாதையும் உண்டு. அன்றியும் காலம் சென்ற திருவாளர்கள் லாலா லஜபதிராய் எஸ். ஆர். தாஸ், பனகல் ராஜா ஆகிய பெரியோர்களுக்கும் அவர்கள், தாழ்த்தப்பட்ட கொடுமை இழைக்கப்பட்ட மக்களுக்காகச் செய்த தொண்டையும் அவர்களுடைய பரோபகார சேவையையும் உயர் குணங்களையும் உத்தேசித்து இந்த சமயத்தில் எனது மரியாதையையும் பக்தியையும் செலுத்தி அனுதாபத்தைக் காட்ட ஆசைப்படுகிறேன், எனவே அவர்களின் [illegible] அவர்களது தொண்டையே பின்பற்றி நடக்க வேண்டியது நமது முக்கிய கடமையாகும்.

அரசியல் துறையிலும் சமுதாயத் துறையிலும் உண்மையான கவலை கொண்டு வேலை செய்கின்றவர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி [illegible] தோன்றுவது சகஜமேயாகுமாயினும், அரசியல் துறையில் இருக்கின்றவர்கள் சமூக இயலைவிட அரசியலிலேயே தங்களுக்கு அதிகமான சுயமரியாதை உணர்ச்சி வேண்டியிருப்பதாய் காட்டிக்கொள்வது மிகவும் அதிசயமாயிருக்கிறது. அன்றியும் சுயமரியாதை உடையவர்களாகிய நாம் இனி ஒரு நிமிஷம் கூட [illegible] அரசாட்சியில் இருக்கக்கூடாது என்கின்ற சுயமரியாதையின் பேரால் மக்களுக்குள் பரப்பப்பட்டு ஒரு உணர்ச்சி இருப்பதாய் எனக்கு தெரியும். [illegible] அரசியலில் [illegible] வேண்டும் என்கிறதும் [illegible] இருக்கிறதே ஒழிய சமூக இயலைப்பற்றி கவனிப்பாரே காணோம். அரசியல் சம்பந்தமான எல்லா இயக்கங்களும் சுதந்திரக்குறைவு எனது பார்த்தவரை ஒரே மாதிரியான கருத்துக்களையே கொண்டிருக்கின்றது.

ஆனால் சமூகத் துறையைக் கவனித்துப் பார்த்தால் [illegible] மாறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. அபிமானமையும் அர்த்தமற்ற புரோகிதத்திற்கு அடிமைப்பட்டிருப்பதையும் மதத்தின் பேரால் மூட நம்பிக்கைகளையும் குருட்டுப்பழக்க வழக்கங்களையும் மற்றும் தனிப்பட்ட நபர்கள் மீதும் வகுப்பார்கள் மீதும் சுமத்தியிருக்கும் பல சமூகக்கொடுமைகளையும் ஒழிக்கவேண்டும் என்று வாய்ப்பேச்சளவில் ஒப்புக்கொள்ளுகின்றவர்கள் ஏராளமாய் இருக்கின்றார்களே ஒழிய காரியத்தில் பாடுபடுகின்றவர்களைக்காணுவது அரிது.

நிற்க அரசியலில் ஏதேச்சாதிகாரத்தை ஒழிக்கவேண்டும் என்ற வீராவேசக்காரர்களுக்குள் சமூகக்கொடுமைகளை ஒழிக்கவேண்டும் என்ற உண்மையான கவலையுள்ளவர்கள் ஆயிரத்தில் ஒருவராவது இருப்பார்களா என்று சொல்வது மிகக்கஷ்டமாயிருக்கிறது. இம்மாதிரி நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நாட்டிற்கு இன்றைய சுயமரியாதை இயக்கமானது நல்லதொரு அவசரமும் அவசியமுமான சமயத்தில் தோன்றியிருப்பது பற்றி நான் மிகுதியும் மகிழ்ச்சி அடைகின்றேன். நிற்க நாம் சமூக சமுதாய வாழ்க்கையில் சுயமரியாதையோடு வாழமுடிந்தாலொழிய அரசியல் வாழ்க்கையில் சுயமரியாதையுள்ள ஜனங்களாக வாழமுடியாது என்பதை உணர்ந்து கொள்வதற்கு இதுவே ஏற்ற சமயமாகும்.

சமுதாய நித்திய வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் முன்னேற முடியாமல் முட்டுக்கட்டை போடும் குருட்டு பழக்க வழக்கங்களிலும் மூட நம்பிக்கைகளிலும் கட்டுப்பட்டுக்கிடக்கும் நாடு அரசியல் துறையில் எவ்விதத்திலும் விடுதலைபெற முடியாது என்கின்ற உண்மையை யாரும் மறுக்கவே முடியாது. தங்கள் சமுதாய வாழ்க்கையில் புரோகித வர்க்கத்தாரால் ஆளப்பட்டுக் கிடக்கும் மக்கள் அரசியல் வர்க்கத்தாரின் ஆதிக்கசூழ்ச்சியிலிருந்து விடுபடுவது என்பது ஒருநாளும் முடியாதகாரியம் ஆகும். அன்றியும் இம்மாதிரி சமூகத்தாரிடையில் இருந்து அப்புரோகிதவர்க்கம் அரசியல் அதிகாரத்தையும் சுவாதீனத்தில் கைப்பற்றிக் கொள்ளுவதிலும் கொஞ்சமும் ஆச்சரியமில்லை. ஒரு புரோகிதன் ஒரு சமூகத்தின் ஆதிக்கம் செலுத்த எத்தனைதான் தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கைப்பற்றி வெற்றி பெற்றானோ அதே தந்திரமான சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் அரசியலிலும் கைப்பற்றினவனே [illegible] அவனுக்கு வெற்றி கிடைக்கவிடுமல்லவா? எப்படியெனில் சமூக இயலில் புரோகித புரட்டுக்கு ஏமாந்தவர்கள் அரசியலில் புரோகிதப்புரட்டிற்கு ஏமாறாமல் இருக்க முடியவே முடியாது. சமூகப் புரோகிதப்புரட்டைக் கண்டுபிடிக்க தைரியமும் யோக்கியதையும் அறிவும் இல்லாத மக்களுக்கு அரசியலில் மாத்திரம் கண்டுபிடிக்கும் அறிவும் ஆற்றலும் எப்படி உண்டாகக்கூடும் என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். சமூகவாழ்வில் ஆயிரக்கணக்கான ஜாதிப் பிரிவுகளை வைத்துக்கொண்டிருக்கும் ஒரு தேசமக்கள் அரசியல் விடுதலைக்கு அத்தியாவசியமான ஒற்றுமையைத் தங்களிடத்தில் காண முடியுமா? சமூகவாழ்வில் தங்களைச் சேர்ந்த வர்க்கத்தாருக்கே நியாயம் வழங்க மறுக்கும் மக்கள் தங்களுக்குள் அரசியல் பொருளாதாரஇயல் ஆகியவைகளில் போர் புரியதக்க தலைவர்களை உண்டாக்கிக்கொள்ள முடியுமா? எனவே இவைகளிலிருந்து நான் உங்களுக்குச்சொல்ல முயலுவது என்னவென்றால், சமூக சுயமரியாதை என்பதும் அரசியல் சுயமரியாதை என்பதும் தனித்தனியே பிரிக்கக்கூடிய காரியமல்ல என்பதுவும் அரசியல் முன்னேற்றக்காரர்கள் என்பவர்கள் முக்கியமாகசமூகமுன்னேற்றத்தைக்கூடவே கவனிக்கவேண்டும் என்பதுவுமே யாகும். அல்லாமலும் சமூக வாழ்க்கையில் சுயமரியாதையைநாம் பெற்றுவிட்டோமானால் அரசியலில் சுயமரியாதைதானாகவேவந்துதீரும். நம்மீது சுமத்தப்பட்டிருக்கும் மிகவும் கேவலமானதும் துர்நாற்றமடிக்கக்கூடியதுமான சமுதாயக்கொடுமைகளை ஒழித்து அவைகளிலிருந்து விடுதலை பெற கவலை கொள்ளாததன்மை, அரசியல் சுதந்திரம்வேண்டும் சமத்துவம் வேண்டும் அன்னிய ஆட்சியிலிருந்து பூரணமாய் விடுபடவேண்டும் என்று வெறும் கூச்சல் போடும் நம்மை வெளியார்கள் பார்த்து அயோக்கியர்கள் என்று நம்மைச் சொல்வதில் என்ன அதிசயமிருக்கின்றது. அரசியல் சுதந்திரம் இல்லாததால் தங்கள் சுயமரியாதைக்கே அடியோடு ஆபத்து வந்து விட்டதாய்ச் சொல்லிக் கொண்டு பள்ளிக்கூடங்களைப் பஹிஷ்கரிக்கும் இந்தக் காலத்து மாணவர்களுக்கு, தங்களிடமிருந்து ஒழுக்கத்தையும் நடத்தையையும் உண்மையான சுதந்திர உணர்ச்சிகளையும் அடியோடு இல்லாமல் போகும்படி செய்வதான சமுதாயக் கொடுமைகளைத் தங்கள்மீது தினம் தினம் புகுத்திக்கொண்டிருப்பதைப் பற்றியாவது புகுத்துபவர்களைப்பற்றியாவது அதற்குக்காரங்கள் [?] மீளாத அடிமைகளாகிக்கொண்டு வருவதைப் பற்றியாவது ஒரு சிறிது கவலைகூட உண்டாவதில்லை.

நமது மாகாணத்திலேயே உயர்தரக் கல்லூரியில் படிக்கும் படிப்பாளி ஒருவன் தன் உடனொத்த மாணவ நண்பனுடன் கூட இருந்து உண்ணுதல் தனிக்கனி மறைவிடம் தேடுவதும், ஏதாவது ஒரு சமயம் சாப்பிட நேர்ந்து விட்டால் தனது ஜாதி வகுப்பு உயர்வு போய்விடும் என்று கருதுவதும், வேறொருவரால் ஏற்பாடு செய்யப்பட்டமை 12 வயதுக்குக் கூட குறைந்ததுமான ஒரு சிறுமியை பெண்ஜாதியாகக்கொள்ள ஒப்புக்கொள்வதும், தனது மதத்தைச் சேர்ந்த கோடிக்கணக்கான மக்களுக்கு உள்ளே சென்று வணங்க உரிமை இல்லாமல் விலக்கிய கோவிலில் சென்று வணங்குவதும், தன் தேசமக்களுள் ஒருவனை தன்னைத் தொட்டாலே தனக்கு தீட்டு வந்து விட்டதாக [?] கருதுவதுமான காரியங்களைப்பற்றி சிறிதும் சிந்தியாமல் அரசியல் கொடுமையால் தனது சுயமரியாதைக்கு விரோத ஆபத்து வந்து விட்டதாக கண்ணீர் வடிக்கிறார்கள்.

இந்த விஷயங்கள் யாருக்கும் தெரியாதவென்றோ அல்லது நான் மிகைபடுத்திக் கூறுகிறேனென்றோ யாரும் நினைத்து விட வேண்டியதில்லை. எந்த வாலிபர்களால் நமது

## சாத்தூர் எட்வர்ட் ஹைஸ்கூல் பழயமாணவர் சங்கம்.

ஷை சங்கத்து மூன்றும் ஆண்டுவிழா 21—2—29ல் திரு. W. P. A. சௌந்தர பாண்டியர் தலைமையில் ஷை ஹைஸ்கூலில் நடைபெறும். அன்று இரவு ஷை சங்கத்தின் ஆதரவில் பால கணபதி விலாச நாடக சபையாரால் "சகுந்தலை" நடிக்கப்பெறும் என்று ஷை சங்கக்காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

## சென்னை சர்க்கார் அறிக்கை.

மால்டா, ஜிப்பரால்டர், இர்தியா, ஏடன், டியூனிஸியா, நாரு மேன்டேட்டட் பலஸ்தினம், டிரான்ஸ் ஜோர்டன், டெங்கனீகா ஆகியவைகளைத் தவிர மற்ற பிரிட்டிஷ் பிரதேசங்கள், பிரிட்டிஷ் பாதுகாப்பு நாடுகள், மேன்டேட்டட் பிரதேசங்கள் ஆகியவைகளுக்குள் ஜர்மன்பிரஜைகள் 1-1-29லிருந்து வைசா இன்றி அனுமதிக்கப்படுவார்கள். மால்டாஜிப்ரால்டர் விலக்கப்பட்டிருந்த போதும் வியாபாரம், தொழில் முதலியவைகளுக்காகவும் வசிப்பதற்காகவும் அங்கு செல்லும் ஜர்மன் பிரஜைகள் வைசால் பெற்றுக்கொண்டு செல்லலாம். பார்ப்பதற்காகச் சென்று திரும்பும் ஜர்மன் பிரஜைகள் வைசா பெறவேண்டியதில்லை. ஆனால் பாஸ்போர்ட்டு பெறுதலும் இமிகிரேஷன் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடத்தலும் வேண்டும். இதேபோன்று பிரிட்டிஷ் பிரஜைகளும் பிரிட்டிஷ் பாதுகாப்புத் தேசப்பிரஜைகளும் வைஸா இன்றி, பிரிட்டிஷ் பாஸ்போர்ட் பெற்று ஜர்மனிக்குப் போகலாம்.

## தங்கவெள்ளி டாலர்கள்.

தமிழ்மகாண சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் W. P. A. சவுந்திரபாண்டிய நாடாரவர்களின் திருவுருவமமைந்த டாலர்கள் தங்கத்திலும் வெள்ளியிலும் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அதன் ஒரு பக்கத்தில் திரு நாடாரவர்களின் திருவுருவமும் பெயரும் மற்றொரு பக்கத்தில 'தலைவர் மாகாண சுயமரியாதை மகாநாடு செங்கல்பட்டு' என்றும் திறமையானவேலைப்பாட்டுடன செய்யப்பட்டு விற்பனைக்குதயாராயிருக்கின்றது.

| | |
|---|---|
| வெள்ளி டாலர் 1 க்கு | ரூ 1—0—0 |
| தங்கம் 1 பவுன்எடையுள்ளது | ரூ 16—0—0 |
| " அரை பவுன் " | ரூ 9—0—0 |

வி. பி. சார்ஜ் வேறு.

விலாசம்:—

ஜி. மன்தான் சாயபு.
கன்ருக்டர் அண்டு ஜெனரல் சப்ளேயர்
நிலக்கோட்டை.

---

நாட்டுக்கு விடுதலை கிடைக்கவேண்டும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றோமோ அந்த வாலிபர்களில் ஆயிரக்கணக்கான ஆண் பெண் இளைஞர்களிடமே தான் இம்மாதிரி குணங்கள் இருந்து வருகின்றன

தொடரும்.

---


வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

### 1000 இரகசிய முறைகள் கொண்ட அருமையான நூல்

வெளிவந்து விட்டது.

## கைத்தொழில் முறைகள்.

இந்நூலில் மாதம் 100 ரூபா முதல் 500 ரூபா வரை சம்பாதிக்கக்கூடிய அரியபோதனைகள் அடங்கியிருக்கின்றன,

இதில் பலவிதயான சோப்புகள், மெழுகுவத்திகள், பாணவேடிக்கைகள், வார்னிஷ்கள், தீக்குச்சி, இங்கிகள், சாயங்கள், வர்ண தினுசுகள், பெப்பர்மிண்ட் தினுசுகள், ஓமம் வாட்டர், பலவித பல்பொடி, பின்கத்துகள், ரேக்குகள், கூந்தல் தைலங்கள். அத்தர் செண்டு தினுசுகள், வாஸ்லயின், பன்னீர், ஷர்பத்துகள், ஸிரப்புகள், பூட்ஸ்பாலிஷ், அரக்குகள். சோடா, லெம்ஜூஸ் பவுடர்கள், லேகியம் முதலிய எல்லாவித மருந்து தினுசுகள் கறிமசாலை பவுடர், பென்சல்கள். மூக்குத்தூள், சிகரெட்டுகள். முதலிய அநேக செய்தி முறைகள் பிரபல அநுபவசாலிகளால் எழுதப்பட்டிருக்கின்றன.

நேயர்களே! வேலையில்லாதத் திண்டாட்டம் தாண்டவமாடும் இக்காலத்தில் இந்நூலானது ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்கவேண்டிய தொன்றாகும் இந்த நூலில் சொல்லியில்லாத கைத்தொழில் ஒன்றுமேகிடையாது,

300 பக்கங்களுக்கு மேற்கொண்ட கைக்கு அழகான பெரியநூல் ஏரோப்பிளேன் டிரேட் மார்க் உள்ளது. இதன் விலை ரூ 1—8—0. உடனே எழுதுங்கள்.

தந்திவிலாசம் 'விகடன்'

**வாசன் புஸ்தகசாலை,**

டெலிபோன் நெ. 3311

244, தங்கசாலை வீதி, சென்னை.


---

### மதுரை முனிசிபாலிட்டி

## டெண்டர் நோட்டீஸ்.

1. 1929-30 வருஷத்துக்கு ஷை முனிசிபாலிட்டியின் உபயோகத்துக்காக நிலக்கரி சப்ளைசெய்ய சீல்வைத்த டெண்டர்கள் தேவை. நிலக்கரி உயர்ந்தகுணமுள்ளதாக இருப்பதுடனும், டெண்டர்களுடன் அலிப்பூரிலுள்ள கவர்ன்மெண்ட் டெஸ்ட் ஹவுஸிலிருந்து சமீபத்தில் கொடுக்கப்பட்ட (Analytical) சர்ட்டிபிகேட்டை அனுப்பவேண்டும். மேலும் சப்ளை செய்யப்படும் நிலக்கரியானது தூசியில்லாமலும், நன்கு சலிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். நிலக்கரியை மதுரை ரயில்வேஷ்டேஷனுக்கு சுமார் 3 மயில் தூரத்திலிருக்கும் சொச்சடையிலும் சுமார் 1 மைலில் தூரத்திலிருக்கும் ஆரப்பாளையத்திலுமுள்ள வாட்டர் வொர்க்ஸ் பம்பிங் ஸ்டேஷன்களிலேயே சப்ளை செய்யவேண்டும்.

2. ஷை 1929-30 வருஷம் முழுவதும் சொச்சடை பம்பிங் ஸ்டேஷனுக்கு சுமார் 700 டன்கள் நிலக்கரியும் ஆரப்பாளையம் பம்பிங்ஸ்டேஷனுக்கு சுமார் 400 டன்களும் தேவையாயிருக்கும்.

3. டெண்டர்கள் நாளது 1929 ம் வருஷம் மார்ச்சுமாதம் 1 தேதியிலாவது அதற்குள்ளாகவாவது, ரூ 100 டிபாசிட் தொகையுடன் அடியில் கையொப்பமிட்டிருக்குமவரிடம் கிடைக்கவேண்டும். டெண்டர் அனுப்புவோர் எக்காரணத்தைமுன்னிட்டும், இந்த முனிசிபாலிட்டியில் அவர்களுக்கு கொடுபடவேண்டிய தொகைகள் ஏதாவதிருந்தால் அத்தொகைகளை டிபாசிட்டாக ஈடுகாட்ட அனுமதிக்கப்பட மாட்டார்கள், ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தார், டெண்டர்கள் பைசல் செய்யப்பட்ட 15 தினத்திற்குள் மேல்கொண்ட ரூ 300 டிபாசிட்டும், இந்த ஆபீஸிலிருந்து கொடுக்கப்படும் நகலின்படி ஓர் கண்ட்ருக்டு எக்ரிமெண்டும் முடித்துக்கொடுக்கவேண்டும்; தவறினால் அவர் டிபாசிட் தொகைகளை இழப்பது மன்னியில் கண்ருக்டும் ரத்துசெய்யப்படும்.

4, எல்லா டெண்டர்களையுமாவது அல்லது எந்த டெண்டரையாவது யாதொரு காரணமுமன்னியில் தள்ளுபடிசெய்ய கௌன்சிலுக்கு உரிமையுண்டு. டிபாசிட் தொகைகள், சப்ளை செய்யப்பட்டதின் நிமித்தம் தொகைசெல்லான வவுச்சர்கள் ஆடிட் முடிந்தபிறகுதான் திரும்பக்கொடுக்கப்படும்.

முனிசிபல் ஆபீஸ்
மதுரை 14-2-29

P. M. Shanmugam Chettiar
*Vice-Chairman in charge*

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னவே காட்டி வாழத்தொடங்கினர். அதிலிருந்து அவர்களனைவரும் நாளடைவில் ஒன்றுபட்டுப் பார்ப்பனரெனத்தம்மை அழைத்ததோடு நில்லாமல் தமிழ் மக்களையும் இழிபெயராகிய சூத்திரரென அழைக்கவும் தலைப்பட்டனர். இதுவே ஆரியருளிருந்த நான்கு வகுப்புள் பார்ப்பனவகுப்பொன்றே காணப்படுவதற்கும் ஏனைய வகுப்புகள் மறைந்ததற்கும் காரணமாம். இனிகம்பர்புரளியைக் காண்பாம்.

'குகன் தனது படகோட்டியை ஏவி இராமன் முதலியோரை கங்கையின் தென்கரையில் விடுமாறுசெய்து அவர்கள் போவதை வடகரையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான்' என வால்மீகி கூற, கம்பர் 'குகனே படகோட்டிச்சென்று அக்கரையடைந்தவுடன் தன்னையும் உடனழைத்தேகுமாறு வேண்டுகின்றனன்' எனக் கூறுகின்றார். மேலும்குகன் சுமந்திரனைத்தன்னுடன் வைத்திருந்து தன் தூதரையனுப்பி இராமன் சித்திரகூடம் வரையிற்போனதை யறிந்துகொண்டு அச்செய்திகளைச் சுமந்திரனிடம் கூறுகின்றனன். இராமன் முதலியோர் அயோத்தியிலிருந்து புறப்பட்ட அன்று தமசாநதிக்கரையில் தங்கி மறுநாள் மாலையில் கங்கைக்கரையடைந்தனர். அதனால் அயோத்தியிலிருந்து கங்கைக்கரையையடைய இரண்டு நாளாயிற்று. பின் இராமன் மறுநாள் கங்கையைத் தாண்டி மத்சநாட்டிலுள்ள காடுகளில்தங்கி மறுநாள் பாரத்துவாசனாச்சிரமத்தில் தங்கி மறுநாள் யமுனைக் கரையிற்றங்கி மறுநாள் சித்திரகூடமடைகின்றனன். இதனால் கங்கையிலிருந்து புறப்பட்ட நான்காம்நாள் அவன் சித்திரகூடமடைகிறான். இவ்வாறு இராமன் சித்திரகூடமடைந்த நிகழ்ச்சியை ஒற்றர் குகனிடம் கூறுகின்றனர். நான்குநாள் நிகழ்ச்சிகளையும் கண்டு அவர்கள் ஓட்டமாக வந்துகூறுவதற்குக்கூட ஒருநாளேனும் வேண்டும். அன்றி அன்றே வந்தனரெனினும் நான்காம்நாள் மாலையிலேயே அவர் குகனையடைந்தவராவார். அச்செய்தி கேட்டறிந்துதான் சுமந்திரன் புறப்பட்டானாதலால் ஐந்தாம்நாட் காலையிலேயே அவன் சிருங்கபேர புரத்தைவிட்டுப் புறப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவன் மூன்றுநாள் அங்கே தங்கி நான்காநாளே புறப்பட்டனனென வால்மீகி கூறுகிறார். இது எவ்வாறு பொருந்துமோ? மேலும் சுமந்திரன் சிருங்கபேர புரத்தை விட்டு அயோத்தியை அடைய மூன்றுநாட்களாயின எனக் கூறுகிறார் வால்மீகி. ஆனால் அயோத்தியிலிருந்து மறுநாளே இராமன் முதலியோர்கங்கையை யடைந்தனராதலால் அவர்முன்னர் கூறியது எவ்வாறு பொருந்தும்? அன்றி சுமந்திரன் பொய்மையாளனாய் நாடகமாகத் தங்கித்தங்கி வந்தவனாதல்வேண்டும். இராமன் அயோத்தியை நீங்கி குறைந்தது ஒன்பதாம்நாள் மாலையிலேயே சுமந்திரன் அயோத்தியையடைந்து இராமன் வனம்புகுந்ததைத் தசரதனிடம் கூறியவனாதல்வேண்டும். ஆனால் வால்மீகி அந்நாளை இராமன் வனமேகிய ஐந்தாம்நாளென சருக்கம் ஐம்பத்திரண்டிலும் பின் அறுபத்து மூன்றாம் சருக்கத்தில் அது ஆறாம்நாளென்னவும் கூறுகிறார். இதனால் வால்மீகி முனிவனுக்குப் பின் முரணைக் கணக்கின்றிக் கூறவல்லவர். இங்ஙனமிவ்வாறாக கம்பரோ மிகவும் வேடிக்கையாகக் கூறுகிறார். அதாவது இராமன் அயோத்தியை விட்டுப்போன அன்றிரவே சுமந்திரன் இராமனைப்பிரிந்து அயோத்தியை யடைந்துவிட்டனனெனக் கூறுகிறார். அத்துடன் தசரதனும் அன்றிரவே மடிந்தனனெனக்கூறுகிறார். வால்மீகி கணக்குப்படி [illegible] தசரதன் இராமன்பிரிந்த ஒன்பதாம்நாள் மாண்டனன். ஆனால் வால்மீகி ஓரிடத்தில் ஐந்தென்றும் மற்றோரிடத்தில் ஆறென்றும் கூறுகிறார். இங்ஙனமிருக்கக்கம்பர் தசரதனை அன்றிரவே மடிந்தனனெனக்கூறுகிறார். இவ்வளவு சீக்கிரமாக அவனை முடியச்செய்ய தசரதன் அவருக்கு என்னகேடு செய்தான்? ஒன்பது நாட்களுக்கப்புறம் இறந்தமன்னனை அன்றே இறந்தனனென்கிறாரோ?

சுமந்திரன் தசரதனையடைந்து இராமனும் இலக்குவனும் கூறியதாகப் பல பொய்ம்மொழிகளைக் கூறினதாகவும் அதைக்கேட்டு தசரதன் புலம்பியதாகவும் அவன் நடுநடுங்கும்படி கோசலை அவனைப் பலவாறு இகழ்ந்துரைத்ததாகவும் பின்னர் தசரதன் அவளைப் பலவாறு இகழ்ந்துரைத்ததாகவும் பின்னர் தசரதன் அவளைப்பணிந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டியதாகவும் பின் கோசலை தாழ்ந்துரைத்ததாகவும் அதுகேட்ட தசரதன் சற்றுநேரம் தூங்கிப்பின் விழித்து தான் முனிவனைக் கொன்றுபெற்ற சாபத்தைக் கூறியதாகவும் பின் இராமனை நினைத்தேங்கி ஏங்கிப் புலம்பி நெடுநேரம் கழித்து ஒருவருமறியா நள்ளிரவில் இறந்து கிடந்ததாகவும் விடிந்த பின்னரே அவனிறந்தமையை அவன் மனைவியர் அறிந்தரற்றியதாகவும் அதிலும் கோசலையும் சுமித்திரையும் பின்னும் நேரங்கழித்து அரற்றுகையால் விழித்தெழுந்ததாகவும் வால்மீகி முனிவர் கூற இவ்வளவு நிகழ்ச்சிகளையும் கம்பர் முற்றிலும் மறைத்து "சுமந்திரன் வந்தான், தசரதன் 'இராமன் சேயனோ அணியனோ' என வினவினன், சுமந்திரன் வனம்புகுந்தனனிராமனென்றான், உடனே தசரதன் மடிந்தான்" என்று கூறுகிறார். இந்நிலை விளக்கக் கம்பர் பாடிய பாடல்கள் இரண்டே.

சுமந்திரன் தசரதனிடம் இராமனும் இலக்குவனும் கூறியதாகக் கூறிய பொய் மொழிகளையெல்லாம் உண்மை போல சுமந்திரன் பிரிவதன் முன்னரே அவனிடம் இராமனும் இலக்குவனும் கூறியதாகக் கம்பர் பாடுகிறார். அப்பொய்யுரையிலும் சீதை ஒன்றும் பேசாது மனங்கலங்கி நின்றாளென்று கூறியதை விடுத்து கம்பர் சீதை மாமியருக்கு வணக்க முரைத்துத் தங்கையர்க்குப் பூவையும் கிளியையும் போற்றுமாறு கூறுக எனக் கூறினளெனக் கம்பர் பொய் புகலுகிறார். சுமந்திரன் கோசலையிடம் பொய் புகலத் துணிந்து பின் கூறாதிருந்த தீய செயலைக் கம்பர் கூறாது மறைத்தார். தசரதன் தான் செய்த பாவச்செயலை இராமன் காடேகு முன்னரே கோசலையிடம் கூறியதாகக் கம்பர் கதைப்போக்கையே மாற்றிக் கூறியுள்ளார். ஈது முன்னரும் காட்டப்பெற்றது. தசரதன் அநாதைபோல விடியுமட்டும் செத்துக் கிடந்ததையும் கோசலையும் சுமித்திரையும் நெடுநேரம் தூங்கியதையும் கம்பர் மறைத்து, தசரதன் செத்தனர் உடனே அவனைக் கோசலையும் தொட்டுப்பார்த்துச் செத்தமையுணர்ந்து அரற்றினளெனக் கம்பர் கூறுகிறார். இவ்வாறு உண்மைக்கு மாறாக கோசலையை நல்லவள் போலக்காட்டுவதாலும் கைகேசியை தீயவள் போலக் காட்டுவதாலும் இக்கம்பர் என் பெற்றார்? கைகேசி தசரதனிறந்தமையறிந்து வந்து அழுததையும் கோசலை அவளைத் திட்டியதையும் வால்மீகி கூற கைகேசியைப்பற்றிய பேச்சையே அவ்விடத்துக் கம்பர் கூறவில்லை. தசரதன் இறந்தபின் ஊரார் சபை கூட்டியதைக்கூறாது மறைத்து விட்டுமுனிவன் பரதனை அழைத்துவர ஆளனுப்பியதைமட்டும் கம்பர் கூறுகிறார். இனி மேற் செல்லுதும்.

வெளி வந்துவிட்டது! வெளிவந்து விட்டது!

இதுவரை வெளியாகாததும், நீடித்த நாட்களாய் அநேகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுமாகிய

கட்டபொம்மு கதை அல்லது

**பாஞ்சாலங்குறிச்சி (சண்டை) சரித்திரம்.**

வெளிவந்துவிட்டது!!!

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாஞ்சாலங்குறிச்சிப் பாளையப்பட்டை 123 வருஷங்களுக்கு முன் அரசாண்ட

"கட்டபொம்மு", "ஊமைத்துரை",

அவர்கள் அரண்மனையில் வேலைபார்த்த தானாபதி

சுப்பிரமணியபிள்ளை

ஆகியவர்களைப் பற்றிய இப்புத்தகத்திலடங்கிய விஷயங்களாவன

1, திருநெல்வேலி ஜில்லாவின் அதிபூர்வ ஸ்திதி, 2. பாண்டியராஜ, 3, நாயக்கர் வம்சம்; 4, நவாபுகள். 5. பிரிட்டிஷ், 6. பாஞ்சாலங்குறிச்சியார் ஆதி உறைவிடம். 7. புறப்பட்டதற்குக் காரணம், 8. சக்கம்மாள் தேவியும் ஜக்கம்மாக்கிடைத்தலும், 9. ஒட்டப்பிடாரம் சாவிகுளம், 10. அழகிய வீரபாண்டியபுரம், 11 வீரமல்லு, கெட்டிபொம்மு கோட்டை, 12. அருக்குளம் பாஞ்சாலக்குறிச்சிக்கு சேர்ந்தவிதம், 13 கட்டபொம்மு நாயக்கர், 14. கோட்டையின் விஸ்தரிப்பு, கோட்டையின் தோற்றம், 15. இக்கோட்டைக்கும், மற்ற கோட்டைகளுக்குமுள்ள வித்தியாசம், 16. கிளிக்கூட்டு ஆலயம், 17. ஆவரங்காடு, 18. தெப்பக்குளம், 19. தேவராயக்கள், 20. குளங்கள், 21. கோட்டைக்குள்ளிருந்த கட்டடங்கள் கட்டப்பட்ட விதம், 22. அரசு நிலைமை, 23., மகமதலியும் கர்னல்ஹெரானும், 24. கெக்கட்டுகுசெவல் பூலுத்தேவர், 25. தேச நிலைமை, 26, காவல் ஏற்பாடுகள், 27. திசை காவல், 28. கோட்டைமேல் படையெடுப்பு, 29. மேஜர் பிளின்ட, 30. கர்னல் புல்லார்ட்டன், 31. ரெவினியூ போர்டின் தாபகம், பாளையக்காரர் கலெக்டர் நியமனமும், ஷெட்டில்மெண்டு ஏற்பாடுகள், 32. திருநெல்வேலிக்கு முதல் கலெக்டர், 33. கட்டபொம்மு நாயக்கரும் இராமநாதபுரமும், 34. கலெக்டர் கடிதங்கள், 35. கலெக்டரிடமிருந்து நாயக்கருக்கு வந்த கடிதத்தின் சாராம்சம், 36. ஜாக்ஸன் காரியார் கோவில், 37. அருப்புக்கோட்டை கோபாலபுரம், 38. குரும்பூர், 39 திப்பு சுல்தான், 40. அச்சங்குளம் வண்டானம், 41. சோளபுரம், 42. கட்டபொம்மு நாயக்கரும் பானர்மன் துரையும், 43. பாஞ்சாலங்குறிச்சிக்கார் தைரியம், 44. தேசாபிமானிகள், 45. [illegible], 46. சண்டை, 47. பிரக்யாதிபெற்றவர்கள், 48. செவத்தையா, 49. கலெக்டர் லஷிங்டன் சமஸ்தானம் மதிப்பு, 50. ரெவினியூ போர்டார் விளம்பரச் சுருக்கம், 51. முதல் சண்டை, 52. மேஜர் பானர்மன் துரை, தானாபதிப்பிள்ளையின் முடிவு, கட்டபொம்மு நாயக்கர் முடிவு, 53. பாஞ்சாலங்குறிச்சி, உறையினில் வைத்திருந்த, 54, ஸ்தானாதிபதிப்பிள்ளையின் உறவினில் வைத்தது, 55. சுமத்தப்பட்ட குற்றங்கள், 56. இரண்டாவது சண்டை, 57. பாஞ்சாலங்குறிச்சியார்பின் சந்ததி வரலாறு, 58. பொதுக் குறிப்புகள், 59. யதாச்சாரம், 60. வேட்டையாடுதல், 61. நகைகள் சந்துவியல்கள், 62. கம்பளத்து தோக்கலவார் சிதறிப்போனதின் காரணம் பாஞ்சாலங்குறிச்சி, 63. சண்டைக்காலத்தில் உத்தியோகம் பார்த்த சர்க்கார் அதிகாரிகளின் பெயர்களும், சண்டை நடத்திய பட்டாளத்து அதிகாரிகளின் பெயர்களும், 64. அடக்கம்பண்ணப்பட்ட இடங்களில் எழுதப்பட்ட வாசகங்கள். புஸ்தகம் 1 க்கு விலை அணா 12.

மானேஜர், சரஸ்வதி அண் கோ, கோவில்பட்டி S. I. R.

## பைராகி தாம்பர பஸ்பம்.

ஒரே வாரத்தில் குணம் தெரியும். பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

மகாமூலிகையால் உருக்கிக்கட்டிய ரசம, வங்கம், தாம்பரம், இம்மூன்றையும் தனித்தனி நீற்று பஸ்பம் செய்து வைத்திருக்கிறோம். அவரவர் வியாதியின் பெலத்திற்குத்தக்கபடி கலந்தனுப்பப்படும்.

எவ்வளவு நாட்பட்ட கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே, வியாதி பெலம்போல் 12, 24, 48 நாள்களுக்கு மேல் சாப்பிடவேண்டியதில்லை யென உறுதியாய்ச் சொல்லுகிறோம். குஷ்டம், மதமதப்பு, தடிப்பு, திமிர் ரணம், குளிப்புண் குறை நோய், வெண்குஷ்டம், பவுத்திரம், கண்டமாலை, லிங்கப்புற்று, யோனிப்புற்று, கன்னப்புற்று, கருமேகம், செம்மேகம் கிரந்தி, அரிப்பு, பற்று, படை முதலிய மேகம் 21 க்கும் சகலவித ரணங்களுக்கும் கை கண்ட அனுபவமுள்ளது.

48 நாள் மருந்து ரூ. 50, 24 நாள் ரூ. 25. 12 நாள் ரூ. 12—8—0.

## பிரமேக நிவாரணி.

வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, ரெத்தக்கடுப்பு, சுத்த, எரிச்சலகளை ஒரே வேளையில் நிறுத்தி விடுகிறது தவறாது.

புட்டி 1 க்கு விலை ரூ. 5—0—0

குறிப்பு:— நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன,
மலாய் நாட்டு வாசிகள மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது ரூ. 5 அட்வான்சு அனுப்பவேண்டும்.

நமது விலாசம்.—

S. நாராயணசாமி பிள்ளை,
போகர் வைத்தியசாலை, ஆயக்குடி. S, I.
MADURA Dt.

குறைந்த சந்தா ! நிறைந்த விஷயம் !!

## "ஆனந்தபோதினி"

### ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை.

"ஆனந்த போதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ் வூழியத்தை மிகுதிப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டு கோளின் மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும் புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மத சமூக தேசிய முன்னேற்றத்தைப் பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைச் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டியிருக்கின்றனர்.

உங்களுக்கு என்ன வேண்டும்.

| | |
|---|---|
| மத உண்மைகளா ? | கிராமச் சீர்திருத்தங்களா ? |
| தத்துவ ஆராய்ச்சிகளா ? | சமூக இயல்களா ? |
| கைத்தொழில் விளக்கங்களா ? | வைத்திய விசேஷங்களா ? |
| வியாபார ரகசியங்களா ? | தேசிய தத்துவங்களா ? |
| விஞ்ஞான (Science) விநோதங்களா? | சிறுகதைப் பகுதிகளா ? |
| | இன்னிசைப் பாட்டுகளா ? |

எல்லாவற்றிற்கும் "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருட சந்தா ரூ 3. 6 மாத சந்தா ரூ 1—12—0
பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூ 4.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஜாவாதேசத்துபூண்டில் தயாரிக்கப்படுகிற

## புல்-சத்

ஒருமுறை உபயோகித்துபாருங்கள்.

ஜன்னி, தலைவலி, வயிற்றுவலி, ஒத்தைத் தலைவலி, வாயுவினால் கைகால் பிடிப்பு, இடுப்புவலி, மற்ற அவயவங்களில் உண்டாகிற குத்தல்வலி முதலியவைகளுக்கு கைகண்ட அவுடதம்.

இதுவரையில் இந்தியாவுக்கு வராதது.

புட்டி 1க்கு கிரயம் ரூ. 1—2—0.

உபயோகிக்கும் முறை புட்டியில் காணலாம்.

விலாசம்:—

K. ராதா கிருஷ்ணன்,
S. 226 கிணத்தடி சந்து,
கொட்டுபாளைய தெரு, நாகபட்டணம்.

## "முன்னேற்றம்."

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அறிவுத்தடைகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி.
வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
152, சிலிகிரோட், சிங்கப்பூர்.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சர்ய நிவர்த்தி!!

# சுவாச காச ரோக நிவாரணி.

# Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலிய வைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒருமுறை பரீக்ஷித்து பார்ப்ப தவசியம்.

48-நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு, வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட், ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார். திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)





நாலு தலைமுறை பாரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தா தேவ ஔஷதங்களென முதல்தா தங்கமெடலும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

## பழனி சி. எம். சாமி.

# குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல் கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ. 16. 6 நாள் புட்டி ரூ 4. வி. பி. சார்ஜ் வேறு.

ஒரு பிரபல டாக்டர் சொல்வதைக் கவனியுங்கள்,

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அயச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இவ்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்று அழுதார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமென்னும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி தொலைந்த பின்பு அயச்செந்தூரம் பலம் உண்டாவதற்காகக்கொடுத்து வந்தேன். மேற்படியாருக்கு பூரண பழைய பலம் ஏற்பட்டு வியாதியஸ்தர் ரொம்பவும் தங்கள் மருந்துகளின் பெருமையையும் அருமையான குணத்தையும் சொல்லி சந்தோஷப்படுகிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடிந்த பெருமை மருந்துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27,

பழனி சி. எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் நீரழிவுக்குகைகண்டது. புட்டி 15 ரூ.
காசபஸ்பம் சூரணத்திற்கு புட்டி 1-க்கு 4 ரூ.
பிரமேக நிவாரணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1-க்கு 2 ரூ.
பிறருக்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,


## C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை,
பழனி S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.



எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனம்! இனம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 8-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினன் வாட்சு கம்பெனி,
யின்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



## மூன்று வாரத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் ரிப்பேர் செய்யவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தவுடன் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்

தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்



## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று)

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இவைகள் விலையோடுவதும் இறக்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.



## திருப்பூர் ஸ்பெஷல் கதர் ஜவுளிகள்.

பார்வைக்கு அழகாயும் உறுதியாயும் மெல்லியதாயும் அதிக நாள் உழைக்கக்கூடியதுமான ஸ்பெஷல் கதர் ஜவுளிகள் எம்மிடம் கிடைக்கும்.

மொத்தமாய் ஆர்டர் செய்பவர்களுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

பனியன் இனாமாகவும் கிடைக்கும்.

விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

வெளியூர் ஆசாமிகள் பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும்.

அட்வான்சு இல்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டாது.

மா. வெ. கருப்பண்ண செட்டியார்,
கதர் வியாபாரம்,
திருப்பூர். (தென்னிந்தியா)

அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

# [ரூ 1-8-0 அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் எளிய ரசங்களுக்கு ஆசாரமாயும், சமயத்தில் உதவும் சஞ்சீவியாயும், எல்லாரா லும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தா யுள்ளதும் அமிர்தரசம் தான். ஒருநிமிஷத்தில் உபயோகித்தால் மணிக் கணக்கில் சுகம் பெற லாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினா லேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

# அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச் சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதி களையும் போக்கி அன்றைக்கன்று ஜெயமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை நன்மையா யாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும்.
24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.


# தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இக்குளிகை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோ சனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த தாதுவை கட்டி நீடித்த போக சக்தியை யும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0
50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.
சாப்பிடும் முறை மருந்துடன் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை,
29க், சைனாபஜார், மதராஸ்

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை
ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல்கைக்கெடியாரங்கள்.




இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடிகாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெ ரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப் படும். உத்திரவாதமானது. ரூ4-15-0 வி. பி. வேறு

ஜீனைன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

சுயமரியாதை பெறவேண்டுமானால்
"குடி அரசு" "திராவிடன்"
பத்திரிக்கைகளை வாங்கிவாசியுங்கள்

WANTED Travelling Agents to book orders and sales for Fancy Perfumery, general goods and Provisions. Monthly salary of Rs. 25 with 10 per cent. Commission on orders booked with third class fare and daily one rupee Batta. Apply for the Terms with an entrance fee of Rs. 5. Unselected condidates, fee of Rs. 5 will be returned to them.

*Sree Ramachandra Stores,*
Bazaar Street P. O. Malleswaram (Bangalore)

சுக்ல வருஷத்திய
நேத்திர ஜீவ நக்ஷத்திராதி
சாஸ்திர சௌகரியமான சர்வ முகூர்த்த.

# ஆனந்தபோதினி பஞ்சாங்கம்.

விலை 1க்கு அ. 2. 6-க்கு அ. 8. 12-க்கு அ. 14 எல்லா ஊர் புஸ்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும். இதனோடு நமது புஸ்தகங்களும் கிடைக்கும்.

"ஆனந்தபோதினி ஆபீஸ்" மதராஸ்.

# ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிக ளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனின் ஒருபக்கத்திற்கு-ஒரு ரூபாய் கொடுக் கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்; நீங் கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோ னுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311-
தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

# மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிரு ப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சி ங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அ ழகும், தைரியமும்உண்டாகும். நீர்த்துப்போன இ ந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மனைவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இ ன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற
விதைகள் செடிகள்

13 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 டஜன் அணா 12. ரோஸ், குரோடன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு, சேபோட்டா இவைகளும். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள்- 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0 காட்டி காய்கறி ரூ 2-8-0 ச. கே. இ. காதர்பீர் சாயபு, வெட்டர்னரி ஹாஸ்பிடல், சேலம்.

# நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத் திலும் அவசியம் இருக்கவேண்டி யது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறை யாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக் கெட்டுகள், தாவணிகள், குழந் தை சொக்காய்கள், கிழிந்த ஆ டைகள் தைக்கலாம், மஸ்லின் துணியிலும் பல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவே லைகள் வெகு அழகாகச் செய்ய லாம். விலை 1க்கு ரூ. 4-15-0.

திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.

தி கிருஷ்ணா ஏஜன்ஸி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

ஸ்ரீமதி நாகம்மாள் அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.